கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.




# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை

பிப்ரவரி 2011

₹ 15/-





தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**மலர் 3, இதழ் 2** **பிப்ரவரி 2011**


## ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944இல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்*.

**பதிப்பாசிரியர்:** விஜய குமார் (விஜய கோவிந்த தாஸ்)

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, ஆனந்த், கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ராம கிங்கர தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** கேசவன்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**பதிவு அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவென்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600 073.
தொலைபேசி: (044) 22272920

**சந்தா அலுவலகம்:** 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net, tamilbtg@gmail.com

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.


**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக
அறக்கட்டளை


2 விளையாட்டு என்னும் அறியாமை

6 கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவோம்

9 நிதாய்-பத-கமல

10 வத்ஸாசுர, பகாசுர வதம்

15 பக்தியும் சமூக நலத் தொண்டும்

18 ஆத்மாவிற்கு விஞ்ஞானப்பூர்வமான ஆதாரம்

22 பிரபுபாதர் நூற்றந்தாதி

24 பகவத் கீதை உண்மையுருவில், ஒரு கண்ணோட்டம் - பாகம் மூன்று

30 ஸ்ரீமத் பாகவதம்


## கேள்விகளும் கருத்துகளும்

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

# விளையாட்டு என்னும் அறியாமை

**ஏக்கத்தையும் கவலையையும் கொடுக்கும் விளையாட்டிலிருந்து தூய்மையான விளையாட்டு வரை**

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரின் போதனைகளிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரை.

***விளையாட்டு என்பது உடல்நலத்திற்காக என்ற நிலை மாறி, தற்போது அவை நேரத்தை வீணடிக்கும் பொழுதுபோக்குகளாகவும் பணம் சம்பாதிப்பதற்கான ஓர் எளிய வழியாகவும் அமைந்துவிட்டன. அத்தகு விளையாட்டுகள் குறித்து ஸ்ரீல பிரபுபாதர் உரைத்தவற்றில் சில:***

சராசரி மனிதன் தனது பிள்ளைப் பருவத்தில் அற்பமான விளையாட்டுகளில் மயங்கியுள்ளான்.

—பிரகலாதரின் திவ்ய உபதேசங்கள்

இந்த யுகத்திலுள்ள மக்கள், பலவகை புலனின்பப் பொழுதுபோக்குகளான திரைப்படம், விளையாட்டு, சூதாட்டம், கேளிக்கைக் கூடம், பௌதிக நூலகம், தீய சகவாசம், புகைப்பிடித்தல், மது அருந்துதல், பொய் உரைத்தல், திருடுதல், சண்டைகள் போன்றவற்றிற்கு இரையாகியுள்ளனர். அவர்களின் மனம் எப்பொழுதும் சஞ்சலத்திற்கு உள்ளாகியிருப்பதுடன் பல்வேறு செயல்களின் காரணத்தால் கவலையால் நிரப்பப்பட்டதாகவும் உள்ளது.

—ஸ்ரீமத் பாகவதம் (1.1.10), பொருளுரை

அழகிய பெண்ணின் கண்கவரும் அழகைக் காண்பதற்காக அசுரர்கள் பல வகையான ஏற்பாடுகளைச் செய்கின்றனர். பந்து விளையாடிக் கொண்டிருந்த பெண்ணை அவர்கள் பார்த்ததாக இங்கு கொடுக்கப்பட்டுள்ளது. சிலசமயங்களில், டென்னிஸ் போன்ற விளையாட்டுகளை எதிர்பாலினருடன் விளையாடுவதற்காகவே அசுரர்கள் ஏற்பாடு செய்வர். இத்தகு விளையாட்டின் குறிக்கோள், அழகிய பெண்ணின் உடலமைப்பை ரசிப்பதும், சூட்சுமமான காமத்தை அனுபவிப்பதுமே.


—ஸ்ரீமத் பாகவதம் (3.20.35), பொருளுரை

பண்பாடுள்ள பெண்கள் பொது இடங்களில் விளையாடுவதில்லை.

—ஸ்ரீமத் பாகவதம் (3.22.17), பொருளுரை

கேளிக்கைகளிலும் விளையாட்டு களிலும் ஈடுபட்டு வாழ்க்கையை அனுபவிப்பது பிள்ளைப் பருவத்தின் நோக்கம் என்றும், பெண்களின் சகவாசத்தை அனுபவிப்பது வாலிபப் பருவத்தின் நோக்கம் என்றும், வயோதிகம் வந்து, மரணம் நெருங்கும் நேரத்தில் பக்தித் தொண்டு அல்லது அஷ்டாங்க யோகப் பயிற்சியை செய்ய முயற்சி செய்யலாம் என்றும், பொதுவாக மக்கள் நினைக்கின்றனர். ஆனால் இத்தகைய முடிவு பக்தியில் உண்மையான தீவிரத்துடன் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உரியதல்ல.

—ஸ்ரீமத் பாகவதம் (4.8.32), பொருளுரை



வேதாந்திகள் இயல்பாகவே பாரபட்சம் இல்லாதவர்கள் என்றபோதிலும், அவர்கள் தங்களது காரணமற்ற கருணையால் என்னை ஆசிர்வதித்தனர். என்னைப் பொறுத்தவரை, நான் சிறுவனாக இருந்தபோதிலும் விளையாட்டில் பற்றில் லாதவனாகவும் புலனடக்கம் உடைய வனாகவும் இருந்தேன்.

—ஸ்ரீமத் பாகவதத்தில் (1.5.24) நாரத முனிவர் கூறியது

மது, மங்கை, மாமிசம், சூது ஆகியவற்றிற்கு எதிராக கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்ட ஆரியர்களின் குடும்பத்தில் ஒருவன் பிறந்திருந்தாலும், இத்தகு தடை செய்யப்பட்ட பொருள்களை அனுபவிக்க வேண்டும் என்று அவன் விரும்பலாம். தவறான சிற்றின்பத்திற்காக விலைமாதரிடம் செல்பவன் எப்போதும் உள்ளான். மது அருந்தவும் மாமிசம் உண்ணவும் உணவு விடுதிக்குச் செல்பவன் எப்போதும் உள்ளான். இரவுநேர கேளிக்கை அரங்குகளில் சூதாடுபவனும், போலியான விளையாட்டுகளை அனுபவிப்பவனும் எப்போதும் உள்ளான். உயிர்வாழிகளின் இதயத்தில் இதுபோன்ற எண்ணங்கள் ஏற்கனவே இருக்கின்றன, ஆனால் சில உயிர்வாழிகள் இத்தகு அருவருக்கத்தக்க செயல்களை அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் கீழ்த்தரமான தளத்திற்கு வீழ்ச்சியடைகின்றனர்.

—ஸ்ரீமத் பாகவதம் (4.29.4), பொருளுரை

## சிறுவர்களுக்கான கிருஷ்ண விளையாட்டுகள்

***விளையாட்டிற்கான எண்ணம் குழந்தைகளிடம் இருத்தல் இயல்பு. அத்தகு எண்ணத்தினை கிருஷ்ணருடன் இணைக்கும்போது அது பக்குவமடைகிறது. இதுகுறித்து ஸ்ரீல பிரபுபாதர் கூறியவை:***

நாம் கிருஷ்ண பக்தர்களின் சங்கத்தில் ஈடுபட்டிருக்கும்போதும் பக்தி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போதும், நமது குழந்தைகளை உடன் அழைத்துச் செல்ல வேண்டும். மனித வாழ்வின் உயரிய நோக்கத்தை அடைவதற்கு தியாகம், தவம் முதலியவற்றின் அவசியத் தேவையை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இவையே சிறுவர்களுக்கு நாம் கொடுக்க வேண்டியவை, விளையாட்டுப் பொருட்கள் அல்ல.

—சத்யபாமாவுக்கு எழுதிய கடிதம், மாயாபூர், 28 பிப்ரவரி, 1972



தற்கால மக்கள் பலவகையான புலனின்பப் பொழுதுபோக்கு விளையாட்டுகளில் தங்களது பொன்னான நேரத்தை வீணடிக்கின்றனர்.

நாம் சிறுவர்களின் விளையாட்டு ஆர்வத்தை சாதகமாக்கிக் கொண்டு, இடையர் சிறுவர்கள், பசுக்கள், மயில்கள், அசுரர்கள் போன்ற வேடங்களால் அவர்களை அலங்கரித்து, கிருஷ்ணர் விளையாடியதுபோன்று அவர்களுக்கும் விளையாடக் கற்றுத்தர வேண்டும். இவ்வாறு அவர்கள் கிருஷ்ணருடனான சங்கத்தில் விளையாடுவதுபோன்று நினைத்துக் கொண்டேயிருந்தால், வெகு விரைவில் கிருஷ்ண உணர்வினராக மாறிவிடுவார்கள்.

—ஸ்தோக கிருஷ்ணருக்கு எழுதிய கடிதம். லாஸ் ஏஞ்சல்ஸ், 13 ஜுன், 1972

சின்னஞ்சிறு சிறுவர்களுக்குக் கிருஷ்ண விளையாட்டுகளைக் கற்றுக் கொடுங்கள்: ஒரு குழந்தையைப் பசுவாகவும், மற்றொன்றை அதை மேய்ப் பவனாகவும் விளையாடச் செய்யுங்கள்; அவர்கள் காட்டிற்குச் செல்வது போன்றும், அங்கு அரக்கர்கள் இருப்பது போன்றும், கிருஷ்ணர் அந்த அரக்கர்களைக் கொல்வது போன்றும் விளையாட்டுகளில் ஈடுபடலாம்.

—கிரிஜாவுக்கு எழுதிய கடிதம், ஆம்ஸ்டர்டாம், 30 ஜுலை, 1972

பாண்டவர்கள் அனைவரும் பகவத் பக்தர்களாக இருந்ததால், தங்களது ராஜ மாளிகையில் விக்ரஹங்களை மரியாதையுடன் பூஜித்து வந்தனர். அத்தகைய குடும்பங்களில் தோன்றும் அதிர்ஷ்டசாலி குழந்தைகள், விக்ரஹ வழிபாட்டை விளையாட்டாகப் பின்பற்றுவது வழக்கம்.

—ஸ்ரீமத் பாகவதம் (2.3.15) பொருளுரை

## விளையாட்டு மனப்பான்மை கிருஷ்ணரிடமிருந்தே தோன்றுகிறது

***எல்லாவற்றிற்கும் ஆதியாக விளங்கும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே விளையாட்டிற்கும் ஆதியாக விளங்குகிறார். ஆனால் அவரது விளையாட்டுகள் தெய்வீகமானவை. அத்தகு தெய்வீக விளையாட்டு***

***குறித்து ஸ்ரீல பிரபுபாதர் அளித்த சில தகவல்கள்:***

அனைத்து இடையர் சிறுவர்களும் மற்றவர்களது மதிய உணவுப் பையைத் திருடுவர். தனது பையை எடுத்துவிட்டனர் என்பதை சிறுவன் அறிந்துகொண்டவுடன், மற்ற சிறுவர்கள் அதனைத் தொலைவில் வீசிவிடுவர், அங்கு இருப்பவர்கள் அதனை மேலும் தொலைவில் வீசிவிடுவர். பையின் உரிமையாளர் விரக்தியடையும்போது அனைவரும் சிரித்து மகிழ்வர், உரிமையாளர் அழும்போது பை திரும்பத் தரப்படும்.

**பொருளுரை:** இன்றும் இத்தகு விளையாட்டும் திருட்டும் இந்த ஜடவுலகில் சிறுவர்களின் மத்தியில் காணப்படுகிறது; ஏனெனில், இந்த மாதிரியான விளையாட்டு இன்பம் என்பது ஆன்மீக உலகத்திலும் உள்ளது, அனுபவித்தல் என்ற எண்ணம் அங்கிருந்துதான் உருப்பெறுகிறது. *ஜன்மாத்யஸ்ய யத:* (வேதாந்த சூத்திரம் 1.1.2). ஆனந்த விளையாட்டுகள் கிருஷ்ணராலும் அவரது நண்பர்களாலும் ஆன்மீக உலகில் வெளிப்படுத்தப்படுகின்றன, அவை நிரந்தரமான இன்பங்கள். ஆனால் இந்த பௌதிக உலகிலுள்ள விளையாட்டுகள் தற்காலிகமானவை. அங்கு இருப்பதோ பிரம்ம சுகம், ஆனால் இங்கு இருப்பதோ ஜடம். ஒருவனை ஜடத்திலிருந்து பிரம்மனிற்கு மாற்றுவதற்கான பயிற்சியை கிருஷ்ண பக்தி இயக்கம் நல்குகின்றது; ஏனெனில், மனித வாழ்வின் குறிக்கோள் அதுவே. *அதாதோ ப்ரஹ்ம ஜிக்ஞாஸா* (வேதாந்த சூத்திரம் 1.1.1). ஆன்மீக உலகில் ஆன்மீகத் தளத்தில் நாம் எவ்வாறு கிருஷ்ணருடன் ஆனந்தமடைய முடியும் என்பதைக் காட்டுவதற்காக அவரே இங்கு இறங்கி வருகிறார். அவர் வருவது மட்டுமின்றி, தனது லீலைகளை விருந்தாவனத்தில் அரங்கேற்றி, ஆன்மீக இன்பத்தை நோக்கி மக்களை ஈர்க்கின்றார்.

—ஸ்ரீமத் பாகவதம் (10.12.5)
மொழிபெயர்ப்பும் பொருளுரையும்

நெல்லி, வில்வம் போன்ற பழங்களைக் கொண்டு சிறுவர்கள் (கிருஷ்ணரும் அவரது நண்பர்களும்) பந்தாடுவார்கள். கண்ணாமூச்சி, ஓடிப் பிடித்தல் போன்ற விளையாட்டுகளை விளையாடுவர். சில வேளைகளில் அவர்கள் காட்டு மான்களைப் போலவும் தவளைகளைப் போலவும் குரல் கொடுத்து கேலி செய்து மகிழ்ந்தனர். மரங்களில் ஊஞ்சலாடி விளையாடினர். சில வேளைகளில், அரசனாகவும் குடிமக்களாகவும் தம்மைக் கற்பனை செய்து சபை நடத்தினர். இவ்வாறாக நதிகளும் ஏரிகளும் ஓடைகளும் நேர்த்தியான மரங்களும் சிறந்த பழவகைகளும் நிறைந்திருந்த விருந்தாவனத்தின் இதமான சூழ்நிலையில் பலராமரும் கிருஷ்ணரும் நண்பர்களான ஆயர்குலச் சிறுவர்களுடன் பல வகையான விளையாட்டுகளில் ஈடுபட்டு மகிழ்ந்தனர்.


—கிருஷ்ணா, புருஷோத்தமரான முழுமுதற் கடவுள், அத்தியாயம் 18

குண்டிசா கோவிலில் பல தோட்டங்கள் இருந்தன. ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவும் அவரது பக்தர்களும் ஒருவருக்கொருவர் அத்தோட்டங்களில் விருந்தாவன லீலைகளை நடத்தினர். இந்திரத்யும்ன ஏரியில் இறங்கி அங்கிருந்த நீரில் அவர்கள் விளையாடினார்.

—சைதன்ய சரிதாம்ருதம்
மத்தியலீலை, 14.75

**நேரத்தை வீணடிக்கும் விளையாட்டுகளை விட்டொழித்து, கிருஷ்ண லீலைகளில் ஆர்வம் காட்டத் தொடங்குவோமாக.**

(தமிழாக்கம்: ராம கிங்கர தாஸ்)



இந்திரத்யும்ன ஏரியில் பகவான் சைதன்யர் தனது சகாக்களுடன் விளையாடிய காட்சி

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



ஹரா என்னும் சொல் இறைவனின் சக்தியைக் குறிக்கின்றது; கிருஷ்ண, ராம என்னும் சொற்கள் இறைவனைக் குறிக்கின்றன. கிருஷ்ண என்றாலும் ராம என்றாலும் "மிகவுயர்ந்த ஆனந்தம்" என்று பொருள். இறைவனின் மிகவுயர்ந்த ஆனந்த சக்தியான ஹரா, விளிச்சொல்லாகும்போது ஹரே என்று மாற்றமடைகின்றது.

ஹரே, கிருஷ்ண, ராம என்னும் இந்த மூன்று வார்த்தைகள் மஹா மந்திரத்தின் தெய்வீக விதைகளாக அமைகின்றன. இம்மஹா மந்திரத்தை உச்சரித்தல், கட்டுண்ட ஆத்மாவிற்குப் பாதுகாப்பு அளிக்கும்படி இறைவனுக்கும் அவரது அந்தரங்க சக்தியான ஹராவிற்கும் விடுக்கப்படும் வேண்டுகோளாகும். தாயை எதிர்பார்த்த குழந்தையின் உண்மையான அழுகையைப் போன்றது இந்த உச்சாடனம். உன்னத தந்தையான ஹரியின் அல்லது கிருஷ்ணரின் கருணையைப் பெறுவதற்கு, அன்னை ஹரா பக்தனுக்கு உதவுகிறாள். இதனால் இந்த மந்திரத்தை நேர்மையுடன் உச்சரிப்பவர்களுக்கு பகவான் தன்னை வெளிப்படுத்துகிறார்.

எனவே, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹா மந்திரத்தை உச்சரிப்பதைத் தவிர, ஆன்மீக உணர்வை அடைவதற்கு இக்கலி யுகத்தில் வேறு எந்த வழிமுறையும் பயனுள்ளதாக அமையாது.

# கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவோம்

*நாம் அனைவரும் நம் வாழ்நாளின் ஒரு காலத்தில் முழுமுதற் கடவுளுக்கு வாக்களித்தோம்; அதைக் காப்பாற்றலாமே!*

**வழங்கியவர்: திருமதி. ரேவதி கோபி தேவி தாஸி**

நண்பர்கள் மற்றும் உறவினர்களோடு குதூகலமாக அன்புடனும் உரிமையுடனும் பழகி சுதந்திர வாழ்வில் நாம் அனைவருமே ஆனந்தம் அடைகிறோம். ஆனால் நாம் பலமுறை சிறை சென்றுள்ளோம். இருள் நிறைந்த தனிமைச் சிறைகளில் வாழ்ந்துள்ளோம். நம்மைச் சார்ந்தோர் என யாருமே இன்றி, செய்வதறியாது திகைத்து திக்கற்று நின்றோம். அக்கடும் சிறையினுள்கூட நம்மைப் பிரியாத ஓர் அன்புத் துணைவனை அத்தகைய துயரமான நிலையில் அடையாளம் கண்டோம். கருணையே வடிவான அந்த கார்மேக வண்ணன் இமைப்பொழுதும் நம்மை நீங்காமல் நம்மிடம் பரிவுகாட்டுவதை உணர்ந்து பெரும் ஆறுதல் அடைந்தோம்.

## இதெல்லாம் எப்போது நடந்தது?

தாயின் கருவறையில் நாம் சிறைப்பட்டிருந்த ஒவ்வொரு முறையும் இவையனைத்தும் நடந்தன. ஸ்ரீமத் பாகவதத்தின் மூன்றாம் காண்டம் 31வது அத்தியாயத்தில் பகவான் கபிலதேவர் தனது தாய் தேவஹூதிக்குக் கூறிய அறிவுரைகளில் இவ்விஷயம் தெளிவாக விவரிக்கப்படுகிறது. "அன்னையின் அடிவயிற்றினுள் குருதி, மலம் மற்றும் சிறுநீரால் ஆன குளத்தில் விழுந்து, அடிவயிற்றின் நெருப்பால் உடல் வாட்டப்பட, வெளியில் வர மிகவும் விரும்பி, உடல்பெற்ற ஆத்மாவானது தன் மாதங்களை எண்ணிக்கொண்டு, "எனதன்பு இறைவனே, துயர் மிகுந்த ஆத்மாவாகிய நான் எப்பொழுது இந்தச் சிறையிலிருந்து விடுதலை அடைவேன்?" என்று வேண்டுகிறது. (ஸ்ரீமத் பாகவதம் 3.31.17)

இவ்வாறு பகவானிடம் கருணை மனு கொடுத்து நாம் அவரையே நம்பியிருந்தோம். மேலும், "(கருவி லிருந்து) விடுவிக்கப்பட்டபிறகு எனதன்பு கிருஷ்ணரிடம் சரணடைந்து பக்தித் தொண்டு செய்து மகிழ்வேன். அதன் மூலம் மீண்டும் ஒரு கருவறையை அடையாமல் நான் என்னைக் காத்துக் கொள்வேன்," என நாம் தீர்மானித்திருந்தோம். கருவறையிலுள்ள அதிர்ஷ்டசாலி ஆத்மாவிற்கு, அவனது முந்தைய நூறு பிறவிகளில் அவன்பட்ட துயரங்கள் அனைத்தும் ஞாபகம் வரலாம் என பாகவதம் கூறுகிறது. இந்த ஜடவுடலோடு ஜடவுலகில் வாழும் வாழ்க்கை எவ்வளவு அவலமானது என்பதை நன்கு உணர்ந்திருந்தோம்.

## கருவறைக் கால நிகழ்வுகள் சில

மஹாராஜா பரீக்ஷித், தன் தாய் உத்தரையின் கருவறையில் இருந்தபோது, அஸ்வத்தாமன் ஏவிய பிரம்மாஸ்திரம் பெரும் சக்தியுடன் அவரை அழிக்க வந்தது. அப்போது கருணையே வடிவான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், உத்தரையின் பிரார்த்தனைக்கு உகந்து, மிகுந்த பேரொளியுடன் கருவறையில் தன்முன் தோன்றி தன்னைக் காப்பாற்றுவதை பரீக்ஷித் கண்டார். தன்னைக் காப்பாற்றிய அந்த நபர் யார் என வியந்த அவர், பிறந்த பின்னரும் அவரையே தேடிய வண்ணம் இருந்ததால், **பரீக்ஷித்** என்று பெயர் பெற்றார்.

பிரஹலாத மஹாராஜா, தாயின் கர்ப்பத்தில் இருந்தபோது, நாரத முனிவரின் உபதேசங்களைக் கேட்டு



*கருவினுள் இருந்த பரீக்ஷித் மஹாராஜரை கிருஷ்ணர் காப்பாற்றிய காட்சி*

மாபெரும் பக்தரானார். மாபெரும் அசுரனான ஹிரண்யகசிபுவால் எதுவுமே செய்ய இயலாத வகையில், திடசித்தமுள்ள பக்தராக அவர் விளங்கியதை நாம் அறிவோம்.

அர்ஜுனன் ‘‘சக்ரவியூகம்’’ பற்றி விவரித்துப் பேசியதைக் கருவறையிலிருந்து கேட்ட அவரது மகன் அபிமன்யு பின்னாளில் அதை ஞாபகம் வைத்திருந்தார்.

சுகதேவ கோஸ்வாமி தன் தாயின் கர்ப்பத்தை விட்டு வெளிவர மறுத்து பல ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்தார். வெளியே வந்தாலும் மாயையில் சிக்காமல் காப்பாற்றுவேன் என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அவருக்கு உறுதியளித்த பிறகே அவர் வெளியே வந்தார்.

கருவில் சிசுவைத் தாக்கும் ‘‘சடம்’’ என்ற வாயுவை ‘‘ஹு’’ங்காரத்தால் (தெய்வீக கோபத்தால்) அடக்கி, ஜடவாழ்விலிருந்து தன்னைக் காத்துக் கொண்டதால், நம்மாழ்வார் ‘‘சடகோபர்’’ என்று பெயர் பெற்றார்.

கருவில் இருந்தபோது நாம் உணர்வு பெற்றிருந்தோம் என்பதற்கு இவை சில உதாரணங்களாக அமைகின்றன. நமது துயர நிலைக்காக இரங்கி, நம் வேண்டுதலை இறைவன் நிறைவேற்றுகிறார். நம் ஆத்ம நண்பரான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், பகவத் கீதையில் (5.29), *ஸுஹ்ருதம் ஸர்வ பூதானாம்*, ‘‘எல்லா உயிர்களின் பிரிய நண்பன் நானே,’’ என்று கூறுகிறார். நாம் அவரை மறந்தாலும் அவர் நம்மை ஒரு கணமும் மறப்பதில்லை, நம்மை விட்டுவிலகுவதும் இல்லை.



தாயின் கர்ப்பத்தை விட்டு வெளிவர மறுத்த சுகதேவ கோஸ்வாமியிடம் கிருஷ்ணர் உறுதியளித்தல்

## இவ்வளவு அன்பு ஏன்?

*ஜீவேர ஸ்வரூப ஹய-க்ருஷ்ணேர நித்ய-தாஸ*, ‘‘ஜீவனின் உண்மையான நிலை, ஸ்ரீ கிருஷ்ணரின் நித்திய தொண்டனாக இருப்பதே,’’ என்று ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு (சைதன்ய சரிதாம்ருதம் ஆதி லீலை, 20.108) கூறுகிறார்.

பகவத் கீதையில் (15.7), *மமைவாம்ஷோ ஜீவ-லோகே ஜீவ-பூத: ஸனாதன:*, ‘‘ஜீவன்கள் எனது நித்தியமான அம்சங்கள்,’’ என்று கிருஷ்ணர் கூறுகிறார்.

*அஹம் பீஜ ப்ரத: பிதா*, ‘‘எல்லோருக்கும் விதையளிக்கும் தந்தை நானே.’’ (பகவத் கீதை 14.4)

மேலும், *ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸன்னிவிஷ்டோ*, ‘‘நான் எல்லோருடைய இதயங்களிலும் வீற்றுள்ளேன்,’’ (பகவத் கீதை 15.15)

கிருஷ்ணர் நமது இதயத்தில் எப்போதும் வீற்றுள்ளார். நாம் அவரை மறந்து, பிரிந்து வந்தாலும், அவர் நம்மைவிட்டு விலகாமல் பரமாத்மாவாக நம் ஒவ்வொருவருடனும் இருக்கிறார். நாம் கிருஷ்ணரின் நித்திய தொண்டர்கள், அவரது நித்திய அம்சங்கள், அவரே நம்மை விதைத்த தந்தை, அவரே நம் இதயத்தில் அமர்ந்து நம்மை வழிகாட்டுபவர், என்பதையெல்லாம் நாம் மறந்துவிட்டாலும், கிருஷ்ணர் மறப்பதில்லை. தன் பாதுகாப்பை விட்டு அகன்றுவிட்ட மைந்தனை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பாசமுள்ள தந்தையாகவே அவர் எப்போதும் இருக்கிறார். நாம் கீழ்நிலை உடல்களை ஏற்கும் சமயங்களில்கூட கருணையுடன் அவர் நம்முடனே உள்ளார்.

## சுதந்திரம் பெற்றுவிட்டோமா?

கிருஷ்ணரிடம் உதவி பெற்று கருவறைச் சிறையிலிருந்து நாம் விடுதலை பெற்றோம். ஆனாலும் உண்மையில் அது விடுதலையா? நாம் தற்போது சுதந்திரமாக இருக்கின்றோமா? நிச்சயமாக இல்லை. நாம் கிருஷ்ணரை மறக்கின்றபோது உடனடியாக முக்குணங்களால் ஆட்கொள்ளப்படுகிறோம். இந்த ஜடவுலகிலுள்ள ஒவ்வொன்றும் முக்குணங்களோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. உண்மையில், இவ்வுலகம், *து:காலயம் அஷாஷ்வதம்*, அதாவது, துக்கத்தின் இருப்பிடமும் நிரந்தரமற்றதுமாகும். இத்தகு உலகில் சுதந்திரமாக அனுபவிக்க நாம் எவ்வளவு போராடினாலும், அது வீண் முயற்சியே. கானல் நீரைக் கண்டு மயங்கும் மான்போல், இன்பம் இருப்பதுபோன்ற ஒரு தோற்றத்தைக் கண்டு நாம் அதைத் தேடித் தேடியே வாழ்வை முடிக்க நேரிட்டு விடுகிறது.

### சுதந்திரம் நமது பிறப்புரிமை

சுதந்திரம் பெற உண்மையில் வழி உள்ளதா? நிச்சயம் உள்ளது.

தைவீ ஹ்யேஷா குண-மயீ
மம மாயா துரத்யயா
மாம் ஏவ யே ப்ரபத்யந்தே
மாயாம் ஏதாம் தரந்தி தே

"ஜட இயற்கையின் முக்குணங்களாலான எனது இந்த மாயா சக்தி வெல்லுவதற்கரியது. ஆயினும் என்னிடம் சரணடைந்தோர் இதனை எளிதில் கடக்கலாம்." (பகவத் கீதை 7.14)

கிருஷ்ணரிடம் நாம் எப்படி சரணடைவது? நாம் கொடுத்த வாக்கை எப்படி நிறைவேற்றுவது? மிகச்சிறந்த கௌடீய வைஷ்ணவ ஆச்சாரியர்களில் ஒருவரான ஸ்ரீல பக்திவினோத தாகூர் அருளிய, ஜீவ் ஜாகோ என்ற பாடலில் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு கூறுகிறார்:

"உறங்குகின்ற ஜீவன்களே, எழுந்திருங்கள். மாயை என்னும் பிசாசின் மடியில் நீண்ட காலம் உறங்கிவிட்டீர்கள். உறங்கியது போதும். 'எனதன்பு இறைவனே, நான் நிச்சயம் தங்களது பக்தித் தொண்டில் ஈடுபடுவேன்' என்று கூறிக்கொண்டு இந்த உலகினில் பிறந்தீர்கள். ஆனால் அந்த வாக்குறுதியை மறந்து பெரும் அறியாமையில் வாழ்வைத் தொடர்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

"உங்களைக் காப்பாற்றவே நான் அவதரித்துள்ளேன். என்னைத் தவிர உங்களுடைய நண்பனாக யார் இருக்க முடியும்? மாயையின் மயக்கத்திலிருந்து உங்களை விடுவிக்கும் மருந்தை நான் கொண்டு வந்துள்ளேன். அது ஹரியின் திருநாமமாகும். சிறப்புமிக்க அந்த ஹரி நாம மஹா மந்திரத்தை என்னிடம் வந்து பெற்றுக் கொள்ளுங்கள்."

நாம் கொடுத்த வாக்கை ஞாபகப்படுத்தி, அதைக் காப்பதற்கு நாம் செய்ய வேண்டியதையும் மிகச் சுலபமாக ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு வெளிப்படுத்துகிறார். "பெற்ற தாயினும் ஆயின செய்யும்" (நாலாயிர திவ்ய பிரபந்தம், 956, திருமங்கையாழ்வார்) ஹரி நாமத்தில், ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹாமந்திரத்தில் சரணாகதியடைவோம். தாம் பெற்ற குழந்தைகளையும் தம்மை நம்பியுள்ளோரையும், இப்பிறவியின் முடிவில், பகவான் கிருஷ்ணரை மீண்டும் சென்றடைய உதவி செய்வதே பெற்றோர் மற்றும் தலைவர்களின் முக்கியக் கடமையாகும். எனவே நாம் நமது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் உறவினர்களோடு, இனிய ஹரி நாமத்தில் ஈடுபட்டு புனிதமடைவோம்.

கிருஷ்ணரை மறவாதிருப்பவர்களோடு மக்களுக்குத் தொடர்பு கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனே இஸ்கான் தொடங்கப்பட்டுள்ளதாக உபதேசாம்ருதத்தின் விளக்கவுரையில் ஸ்ரீல பிரபுபாதர் கூறுகிறார். பெறற்கரிய இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாம் பெருவாழ்வு பெறுவோமாக.

ஹரி: ஓம் தத் ஸத்

திருமதி. ரேவதி கோபி தேவி தாஸி, கடந்த 13 ஆண்டுகளாக கிருஷ்ண பக்தியைப் பயிற்சி செய்யும் சித்த மருத்துவர். இவர், தனது கணவர் திரு. வனமாலி கோபால தாஸ் அவர்களுடன் இஸ்கான் கும்பகோணத்தில் சேவை செய்து வருகிறார்.



நாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற, ஹரி நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபடும்படி ஸ்ரீ சைதன்யர் அழைப்புவிடுத்தல்

# நிதாய்-பத-கமல

பிப்ரவரி 16, நித்யானந்த த்ரயோதசி,
ஸ்ரீ நித்யானந்த பிரபுவின் அவதாரத்
திருநாள்

பிப்ரவரி 18, ஸ்ரீல நரோத்தம தாஸ் தாகூர்
தோன்றிய நாள்

பகவான் நித்யானந்தரைப் புகழ்ந்து ஸ்ரீல நரோத்தம தாஸ் தாகூர் எழுதிய பாடல்

கலி யுக தர்மமான ஹரி நாம சங்கீர்த்தனம் என்னும் பொக்கிஷத்தை மக்கள் அனைவருக்கும் வாரி வழங்குவதற்காக முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணர் சுமார் 500 வருடங்களுக்கு முன்பு ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவாக அவதரித்தார். அச்சமயத்தில் பகவான் பலராமர், சைதன்யருடன் இணைந்து, ஸ்ரீ நித்யானந்த பிரபுவாக அவதரித்தார். கருணையே வடிவான ஸ்ரீ நித்யானந்த பிரபுவின் புகழை தலைசிறந்த கௌடீய வைஷ்ணவ ஆச்சாரியர்களில் ஒருவரான ஸ்ரீல நரோத்தம தாஸ் தாகூர் பல்வேறு பாடல்களின் வடிவில் எளிய வங்காள மொழியில் அருளியுள்ளார். பின்வரும் பாடல், பிரார்த்தனை என்னும் அவரது பாடல் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

**(1)**

**நிதாய்-பத-கமல, கோடி-சந்த்ர-ஸுஷீதல,**
**ஜே சாயாய் ஜகத ஜுராய்**
**ஹேனோ நிதாய் பினே பாய், ராதா-க்ருஷ்ண பாய்தே நாய்,**
**த்ருட கோரி' தரோ நிதைர் பாய்**

பகவான் நித்யானந்தரின் பாத கமலங்கள் கோடி சந்திரனின் குளுமையை வழங்கக்கூடியவை. இவ்வுலகம் உண்மையான அமைதியை விரும்பினால், அவரிடம் தஞ்சமடைய வேண்டும். சகோதரர்களே, அத்தகு நிதாய் இன்றி ராதா கிருஷ்ணரை அடைவது சாத்தியமல்ல. ராதா கிருஷ்ணரின் ராஸ லீலைகளில் பங்கு பெற உண்மையிலேயே ஆர்வம் இருந்தால், பகவான் நித்யானந்தரின் திருப்பாதங்களை உறுதியாகப் பற்றிக்கொள்.



ஸ்ரீ நித்யானந்த பிரபு தனது அடியார்களுடன்

**(2)**

**ஸே ஸம்பந்த நாஹி ஜா'ர், ப்ருதா ஜன்ம கேலோ தா'ர்,**
**ஸேய் பஷு போரோ துராசார்**
**நிதாய் நா போலிலோ முகே, மஜிலோ ஸம்ஸார-ஸுகே,**
**வித்யா-குலே கி கோரிபே தார்**

நித்யானந்த பிரபுவிடம் சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளாதவன் தனது வாழ்க்கையை வீணடித்துவிட்டான். அத்தகு மனிதன் உண்மையில் மிகவும் கொடிய மிருகத்தைப் போன்றவன். நித்யானந்தரின் திருநாமத்தை அவன் ஒருபோதும் உச்சரிக்காததால், போலியான சம்சார சுகத்தில் மூழ்கியுள்ளான். அவனுடைய கல்வியும் குலமும் எவ்வாறு அவனைப் பாதுகாக்க முடியும்?

**(3)**

**அஹங்காரே மத்த ஹோய்யா, நிதாய்-பத பாஸரியா,**
**அஸத்யேரே ஸத்ய கோரி மானி**
**நிதாய்யேர் கருணா ஹபே, வ்ரஜே ராதா-க்ருஷ்ண பாபே,**
**தரோ நிதாய்-சரண து'கானி**

அஹங்காரத்தால் பித்துப்பிடித்தவர்கள் நித்யானந்த பிரபுவின் திருவடிகளை மறந்து, உண்மையல்லாதவற்றை உண்மையாக ஏற்றுள்ளனர். நித்யானந்தரின் கருணையைப் பெற்றால், விருந்தாவனத்திலுள்ள ராதா கிருஷ்ணரை அடைய முடியும். எனவே, நிதாயின் இரு திருவடிகளையும் பற்றிக் கொள்ளுங்கள்.

**(4)**

**நிதாய்யேர் சரண ஸத்ய, தாஹார ஸேவக நித்ய,**
**நிதாய்-பத ஸதா கோரோ ஆஷ**
**நரோத்தம போரோ துகீ, நிதாய் மோரே கோரோ ஸுகீ,**
**ராகோ ரங்க-சரணேர பாஷ**

நித்யானந்த பிரபுவின் திருவடிகள் சத்தியமானவை, அவருடைய சேவகர்களும் நித்தியமானவர்கள். நிதாயின் பாதங்களை எப்போதும் பிடித்துக்கொள். இந்த நரோத்தமன் பெரும் துன்பத்தில் உள்ளான், நித்யானந்த பிரபுவே, எனக்கு இன்பத்தைக் கொடுங்கள். தங்களது சிவந்த தாமரைத் திருவடிகளின் அருகில் தயவுசெய்து என்னை வைத்துக் கொள்ளவும்.

# வத்ஸாசுர, பகாசுர வதம்

## இனிமையான கிருஷ்ண லீலைகளின் ஒரு சிறு பகுதி

*தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய கிருஷ்ணா, புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் என்னும் புத்தகத்தின் பதினொன்றாம் அத்தியாயத்தின் சில பகுதிகள்*



*தந்தையின் விருப்பப்படி அவரது பாதுகையைச் சுமந்து வரும் ஸ்ரீ கிருஷ்ணர்*

ஒரு சில வேளைகளில் அன்னை யசோதை கிருஷ்ணரிடம் அவள் உட்காருவதற்கான மணையை எடுத்துவரச் சொல்வதுண்டு. ஒரு குழந்தையால் சுமக்கக்கூடியதைக் காட்டிலும் மணை மிகவும் கனமாக இருந்தாலும், கிருஷ்ணர் எப்படியோ அதைத் தனது அன்னையிடம் கொண்டு வந்து கொடுப்பார். சில வேளைகளில், அவரது தந்தை, நாராயணரை வழிபடும்போது, தனது மரப்பாதுகைகளைக் கொண்டு வரச் சொல்வார். கிருஷ்ணர் மிகுந்த சிரமத்துடன் பாதுகையைத் தனது தலையில் வைத்து தந்தையிடம் கொண்டுசேர்ப்பார். ஏதாவது ஒரு கனமான பொருளைத் தூக்கச் சொல்லி அஃது அவரால் முடியாமற் போனால், அவர் தமது கைகளை மட்டும் அசைப்பார். இவ்வாறாக, தினமும், ஒவ்வொரு கணமும், அவர் தம் தாய் தந்தையருக்குப் பல வகைகளில் மகிழ்ச்சியூட்டினார். பரம பூரண உண்மையான புருஷோத்தமரான முழுமுதற் கடவுள், எவ்வாறு தனது தூய பக்தர்களால் கட்டுப்படுத்தப்பட்டு, அவர்களது விருப்பங்களுக்கு ஏற்ப நடப்பவர் என்பதை பரம்பொருளைத் தேடும் மாமுனிவர்களுக்கும் தத்துவ ஞானிகளுக்கும் அறிவுறுத்துவதற்காகவே இத்தகு குழந்தைத்தனமான பரிமாற்றங்களை விருந்தாவனவாசிகளுடன் இணைந்து பகவான் வெளிப்படுத்தினார்.

ஒருநாள் ஒரு பழ வியாபாரி நந்த மகாராஜரின் இல்லத்திற்கு முன்பு வந்தாள். ''பழம் வேண்டுபவர்கள் வந்து வாங்கிக் கொள்ளலாம்'' என்று அவள் கூவியதைக் கேட்ட குழந்தை கிருஷ்ணர், உடனடியாக சிறிது தானியத்தை தனது உள்ளங்கையில் எடுத்துக் கொண்டு, அதற்குப் பதிலாக பழத்தை வாங்கச் சென்றார். அக்காலத்தில் வியாபாரம் பண்டமாற்று முறையில் நடைபெற்று வந்தது; பழங்களையும் இதர பொருட்களையும் தனது பெற்றோர் தானியத்தைக் கொடுத்து வாங்கியதை கிருஷ்ணர் பார்த்திருக்கலாம், அவரும் அப்படியே செய்ய முற்பட்டார். ஆனால் அவரது உள்ளங்கைகள் மிகவும் சிறியவையாக இருந்ததாலும் தானியங்களை உறுதியாகப் பிடித்துக் கொள்வதில் அவர் கவனக்குறைவாக இருந்ததாலும், தானியங்கள் கீழே சிதறின. இதைக் கண்ட பழ வியாபாரி, இறைவனின் அழகில் முற்றிலுமாகக் கவரப்பட்டு, அவரது உள்ளங்கையில் எஞ்சியிருந்த சிறிதளவு தானியத்தை உடனடியாக வாங்கிக் கொண்டு, அவரது கரங்களைப் பழங்களால் நிரப்பினாள். அச்சமயம் தன் பழக்கூடை முழுவதும் ஆபரணங்களால் நிறைந்திருந்ததை



*பழ வியாபாரியின் கூடையை நகைகளால் நிறைத்த ஸ்ரீ கிருஷ்ணர்*

பழவியாபாரி கண்டாள். இறைவன் எல்லா நலன்களையும் வழங்கக்கூடியவர். இறைவனுக்கு யாரேனும் ஏதேனும் ஒரு பொருளைக் கொடுத்தால், அவன் நஷ்டமடைவதில்லை; பதிலாக, கோடிக்கணக்கில் இலாபமடைகிறான்.

ஒருநாள், இரு அர்ஜுன மரங்களுக்கு முக்தியளித்தவரான பகவான் கிருஷ்ணர் பலராமருடனும் மற்ற குழந்தைகளுடனும் யமுனை நதிக்கரையில் விளையாடிக் கொண்டிருந்தார். காலையில் வெகு நேரமாகிவிட்டதால், அவர்களை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்காக பலராமரின் தாயான ரோகிணி நதிக்கரைக்குச் சென்றாள். ஆனால் பலராமரும் கிருஷ்ணரும் தங்களது நண்பர்களுடன் விளையாடுவதில் மிகவும் மும்முரமாக இருந்ததால் வீட்டிற்குத் திரும்ப அவர்களுக்கு மனமில்லை; மேன்மேலும் விளையாடுவதிலேயே தங்களை ஈடுபடுத்தினர். அவர்களை வீட்டிற்கு அழைத்துவர முடியாமல் போகவே, வீட்டிற்குச் சென்ற ரோகிணி அவர்களை மீண்டும் அழைப்பதற்கு யசோதையை அனுப்பி வைத்தாள். அன்னை யசோதை தன் மகனிடம் மிகவும் பாசம் கொண்டிருந்ததால் அவரை வீட்டிற்குத் திரும்பும்படி அழைக்க அவள் வந்ததும், அவளது மார்பில் பால் பெருக்கெடுத்தது. ''எனதன்பு குழந்தையே, வீட்டிற்குத் திரும்பி வருவாயாக, மதிய உணவிற்கான உனது நேரம் ஏற்கனவே கடந்துவிட்டது,'' என்று அவள் உரக்கக்கூவி அழைத்தாள். அதனைத் தொடர்ந்து, ''எனதன்பு கிருஷ்ணா, எனதன்பு கமலக்கண்ணா, உடனே வந்து என் மார்பில் பால் அருந்துவாயாக. நீ அதிகமாக விளையாடிவிட்டாய். எனதன்பு குழந்தாய், உனக்கு மிகுந்த பசியிருக்கும். இவ்வளவு நேரம் விளையாடியதில் உனக்கு நிச்சயம் களைப்பாயிருக்கும்,'' என்று கூறினாள். அவள் பலராமரையும், ''எனதன்பு இராமா, குலத்திற்குப் பெருமை சேர்ப்பவனே, என் குழந்தாய், உன் தம்பி கிருஷ்ணனையும் அழைத்துக் கொண்டு உடனே வருவாயாக. அதிகாலையிலிருந்து நீங்கள் விளையாடிக் கொண்டிருக் கிறீர்கள், நிச்சயம் நீங்கள் மிகவும் களைத்திருப்பீர்கள். வீட்டிற்குத் திரும்பிவந்து மதிய உணவை எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் தந்தை நந்தராஜா உங்களுக்காகக் காத்திருக்கிறார். அவர் சாப்பிட வேண்டாமா? நீங்கள் வந்தால்தான் அவர் சாப்பிடுவார்,'' என்று கூறி அழைத்தாள்.

நந்த மகாராஜர் தனது உணவை சாப்பிட இயலாமல் தங்களுக்காகக் காத்திருக்கிறார் என்பதைக் கேட்டவுடன், கிருஷ்ணரும் பலராமரும் புறப்படத் தொடங்கினர். ''ஆட்டம் உச்சக் கட்டத்திலிருக்கும்போது கிருஷ்ணன் எங்களை விட்டுப் போகிறான். அடுத்த முறை அவனை இப்படிப் போகவிட மாட்டோம்,'' என்று அவர்களின் விளையாட்டுத் தோழர்கள் குற்றம் சாட்டினர்.

அதைத் தொடர்ந்து, கிருஷ்ணரின் விளையாட்டுத் தோழர்கள் மீண்டும் அவரை விளையாட்டில் சேர்த்துக் கொள்ள மாட்டோமென்று அச்சுறுத்தினார்கள். அதனால் அச்சமடைந்த கிருஷ்ணர் வீட்டிற்குத் திரும்பிச் செல்லாமல், சிறுவர்களுடன் மீண்டும் விளையாடச் சென்றுவிட்டார்.

அச்சமயத்தில், அச்சிறுவர்களைக் கடிந்து கொண்ட யசோதை கிருஷ்ணரிடம், ''எனதன்பு கிருஷ்ணா, நீ என்ன தெருப் பையனா? உனக்கு வீடு இல்லையா? வீட்டுக்குத் திரும்பி வருவாயாக. அதிகாலையிலிருந்து விளையாடியதால் உன் உடம்பெல்லாம் புழுதி படர்ந்திருப்பதை நான் காண்கிறேன். இப்போது நீ வீட்டுக்கு வந்து குளிக்க வேண்டும். மேலும், இன்று உனது பிறந்தநாள் விழா. எனவே நீ நிச்சயம் வீட்டிற்குத் திரும்பிவந்து பிராமணர்களுக்குப் பசுக்களைத் தானம் செய்ய வேண்டும். உன் தோழர்களையெல்லாம் அவர்களின் அன்னையர் ஆபரணங்களால் எப்படி அலங்கரித்திருக்கிறார்கள், பார்! நீயும் சுத்தம் செய்து கொண்டு நேர்த்தியான ஆடைகளையும் ஆபரணங்களையும் அணியவேண்டும். எனவே, உடனே வருவாயாக, நீராடி, நன்றாக

உடையுடுத்திக் கொண்டு, பின்னர் மீண்டும் உனது விளையாட்டைத் தொடரலாம்,'' என்று கூறினாள்.

இவ்வாறாக பிரம்மதேவர், சிவபெருமான் போன்ற மாபெரும் தேவர்களால் வழிபடத்தக்க பகவான் கிருஷ்ணரையும் பலராமரையும் அன்னை யசோதை வீட்டுக்குத் திரும்பும்படி அழைத்தாள். அவர்களை அவள் தன் சொந்தக் குழந்தைகளாக நினைத்தாள்.

அன்னை யசோதையின் மைந்தர் களான கிருஷ்ணரும் பலராமரும் வீட்டிற்கு வந்தபோது, அவள் அவர்களை சிறப்பாக நீராட்டி, ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிவித்தாள். பின்னர், பிராமணர்களை வரவழைத்து, கிருஷ்ணரின் பிறந்தநாளை முன்னிட்டு, கிருஷ்ண பலராமரின் திருக்கரங்களால் நிறைய பசுக்களை தானமாக வழங்கினாள். இவ்வாறாக கிருஷ்ணரின் பிறந்த நாள் விழாவை அவள் தனது வீட்டில் கொண்டாடினாள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின், நந்த மகாராஜரின் தலைமையில் வயதில் பெரியவர்களான கோபாலர்களின் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மஹாவனத்தில் அசுரர்களால் ஏற்படும் தொல்லைகளை எப்படி நிறுத்துவது என்பது பற்றி அவர்கள் விவாதிக்கத் தொடங்கினர். அக்கூட்டத்தில் நந்த மகாராஜரின் சகோதரரான உபநந்தரும் இருந்தார். அவர் கற்றறிந்தவர், அனுபவமிக்கவர்; கிருஷ்ண பலராமரின் நலனில் மிகுந்த அக்கறையுள்ளவர். தலைவர்களுள் ஒருவராகிய அவர் சபையில் இவ்வாறு பேசினார்: ''எனதருமை நண்பர்களே, இங்குள்ள அமைதியான சூழ்நிலையைக் கெடுப்பதற்காக மாபெரும் அசுரர்கள் இங்கு வருவதையும் சிறு குழந்தைகளைக் கொல்வதில் அவர்கள் குறியாயிருப்பதையும் நாம் தொடர்ந்து காண்கிறோம்; எனவே, நாம் இந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்குச் செல்வது நல்லது. பூதனை கிருஷ்ணரைக் கொல்ல முயற்சித்ததை எண்ணிப் பாருங்கள். அவ்வளவு கொடிய அரக்கியின் கைகளிலிருந்து பகவான் ஹரியின் கிருபையால் கிருஷ்ணர் காப்பாற்றப்பட்டார். அடுத்ததாக சூறாவளி அரக்கன் கிருஷ்ணரை ஆகாயத்தில் தூக்கிச் சென்றான், அப்போதும் பகவான் ஹரியின் கிருபையால் கிருஷ்ணர் காப்பாற்றப்பட்டார், அசுரனோ கீழே கல்லின்மீது விழுந்து மடிந்தான். சமீபத்தில் இக்குழந்தை இரண்டு மரங்களுக்கிடையே விளையாடிக் கொண்டிருந்தபோது, மரங்கள் பயங்கரமாகக் கீழே விழுந்தன, இருப்பினும் குழந்தைக்கு காயமெதுவும் ஏற்படவில்லை. பகவான் ஹரி மீண்டும் அவனைக் காப்பாற்றினார். இந்தக் குழந்தையோ இவனுடன் விளையாடிக் கொண்டிருந்த வேறு குழந்தையோ கீழே சாய்ந்த மரங்களினால் நசுங்கியிருந்தால் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு பார்த்தால், இந்த இடம் இனிமேல் பாதுகாப்பானதல்ல என்ற முடிவுக்கு நாம் வரவேண்டியதாகிறது. நாம் இங்கிருந்து போய்விடலாம். பற்பல பெருந்துன்பங்களிலிருந்து பகவான் ஹரியின் கிருபையால் நாம் அனைவரும் காப்பாற்றப்பட்டுள்ளோம். தற்போது நாம் எச்சரிக்கையுடன் இருந்து, இங்கிருந்து வெளியேறி, அமைதியாக வசிப்பதற்கு ஏதுவான வேறு இடத்திற்குச் செல்ல வேண்டும். விருந்தாவனம் என்னும் பெயருள்ள வனம் ஒன்று உள்ளது, அங்கு செடிகளும் மூலிகைகளும் தற்போது புதிதாக வளர்ந்துள்ளன, நாம் அனைவரும் அங்கு செல்ல வேண்டுமென்று நான் எண்ணுகிறேன். பசுக்களைப் பராமரிப்பதற்குத் தகுந்த சிறந்த மேய்ச்சல் நிலங்கள் அங்குள்ளன. நாம் நமது குடும்பத்தினருடனும், கோபியர்களுடனும் குழந்தைகளுடனும், அங்கு நிம்மதியாக வசிக்கலாம். விருந்தாவனத்துக்கு அருகில் அழகிய கோவர்தன மலை உள்ளது. நம் விலங்குகளின் உணவிற்கு ஏற்ற புல்லும் மற்ற வகையான தீவனமும் அங்கு நிறைவாக உள்ளதால், அங்கு வசிப்பதில் எவ்வித சிரமமும் இருக்காது. எனவே, அந்த அழகிய இடத்திற்கு நாம் உடனே புறப்பட்டுச் செல்லலாம் என்பது எனது அறிவுரை. காலம் தாழ்த்த வேண்டிய அவசியமில்லை. நீங்கள் விரும்பினால், நாம் நமது வண்டிகளை உடனே தயார் செய்து, பசுக்களை முன் நடத்திப் புறப்படலாம்.''

உபநந்தர் கூறியதைக் கேட்ட கோபாலர்கள் அனைவரும் உடனடியாகத் தமது சம்மதத்தை அறிவித்தார்கள். ''இப்போதே செல்லலாம்'' என்றார்கள். ஒவ்வொருவரும் தன் வீட்டுச் சாமான்களையும் பாத்திர பண்டங்களையும் வண்டிகளில் ஏற்றி விருந்தாவனத்திற்குப் புறப்படத் தயாரானார்கள். கிராமத்தின் வயதான பெரியவர்கள், பெண்கள், மற்றும் குழந்தைகள் வண்டிகளில் அமர்த்தப்பட்டார்கள், வில்லும் அம்பும் கையில் ஏந்திய இதர கோபாலர்கள் வண்டிகளுக்குப் பாதுகாப்பாகப் பின்னால் நடந்து சென்றார்கள். பசுக்களும் காளைகளும் தங்களது கன்றுகளுடன் முன்வைக்கப்பட்டு, கால்நடைகளையும் வண்டிகளையும் சுற்றிப் பாதுகாப்பாக கோபாலர்கள் ஆயுதங்களுடன் நின்றபடி கொம்புகளையும் தாரைகளையும் முழங்கத் தொடங்கினார்கள். இவ்வாறு பெரும் ஓசையுடன் அவர்கள் விருந்தா வனத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

விரஜ பூமியின் நங்கையரை எவ்வாறு வர்ணிப்பது? அழகிய ஆடைகளையும் ஆபரணங்களையும் விலையுயர்ந்த புடவைகளையும் அணிந்து அவர்கள் அனைவரும் வண்டிகளில் அமர்ந்திருந்தனர். வழக்கம் போல் அவர்கள் கிருஷ்ணரின்



கோகுலத்திலிருந்து விருந்தா வனத்திற்குச் செல்லும் விரஜவாசிகள்

பால்ய லீலைகளைப் பாடினார்கள். அன்னை யசோதையும் ரோகிணியும் தனி வண்டியில் அமர்ந்திருந்தனர். கிருஷ்ணரும் பலராமரும் அவர்களின் மடிகளில் இருந்தார்கள். அன்னை யசோதையும் ரோகிணியும் வண்டியில் சென்றபோது, கிருஷ்ணருடனும் பலராமருடனும் பேசிக் கொண்டு சென்றார்கள். குழந்தைகளின் பேச்சைக் கேட்டு மகிழ்ந்திருந்த அவர்கள், மிகமிக அழகாகக் காட்சியளித்தனர்.

இவ்வாறாக, எல்லோரும் மிகுந்த அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் நித்தியமான வாழ்க்கை வாழும், விருந்தாவனத்தை அவர்கள் அடைந்த பின்னர், அவ்விடத்தைச் சுற்றி அரைவட்ட வடிவில் வண்டிகளை நிறுத்தி, தற்காலிக இருப்பிடத்தை வடிவமைத்தனர். விருந்தாவனம், கோவர்தன மலை, யமுனைநதிக்கரைஆகியவற்றின்அழகிய தோற்றத்தை கிருஷ்ணரும் பலராமரும் கண்டபோது மிகுந்த மகிழ்ச்சியுற்றனர். அவர்கள் வளர்ச்சி பெற்றபோது, தங்களது பெற்றோர்களுடனும் மற்றவர்களுடனும் மழலை மொழியில் பேசத் தொடங்கினர், இவ்வாறாக அவர்கள் எல்லா விருந்தாவன வாசிகளுக்கும் பேரானந்தத்தை வழங்கினர்.

விரைவிலேயே கிருஷ்ணரும் பலராமரும் கன்றுகளை கவனித்துக் கொள்வதற்கு உகந்த வளர்ச்சியைப் பெற்றனர். குழந்தைப் பருவத்திலிருந்தே ஆயர் குலச் சிறுவர்களுக்குப் பசுக்களைப் பராமரிப்பதற்கான பயிற்சி வழங்கப்படும், அவர்களின் முதல் பொறுப்பு சிறு கன்றுகளைப் பராமரித்தல். எனவே, கன்றுகளுக்கு பொறுப்பேற்றுக் கொண்ட கிருஷ்ணரும் பலராமரும் மற்ற ஆயர் குலச் சிறுவர்களுடன் இணைந்து மேய்ச்சல் நிலங்களுக்குச் சென்றனர்; அங்கு அவர்கள் தங்களது நண்பர்களுடன் விளையாடினர். கன்றுகளை மேய்க்கும்போது, சில வேளைகளில் இரு சகோதரர்களும் தங்களது புல்லாங்குழலை இசைத்தனர். சில வேளைகளில் சிறு குழந்தைகள் பந்து விளையாடுவதுபோன்று, அவர்கள் நெல்லிக்கனியையும் வில்வப் பழத்தையும் கொண்டு விளையாடினர். சில சமயங்களில் அவர்கள் கால் சலங்கைகள் இனிமையாக ஒலிக்க நடனமாடினர். சில வேளைகளில் அவர்கள் தங்களை கம்பளங்களால் மூடிக்கொண்டு காளைகளைப் போலவும் பசுக்களைப் போலவும் பாவனை செய்தனர். இவ்வாறு கிருஷ்ணரும் பலராமரும் விளையாடினார்கள். சில சமயங்களில் பசுக்கள், எருதுகள் போன்று சப்தமிடுவர், எருதுச் சண்டையிலும் ஈடுபடுவர். சில சமயங்களில் பல்வேறு மிருகங்கள், பறவைகளைப் போன்று சப்தமிடுவர். இவ்வாறாக, பார்ப்பதற்கு சாதாரண பௌதிகக் குழந்தைகளைப் போலத் தோன்றிய அவர்கள் தங்களது பால்ய லீலைகளை அனுபவித்தனர்.

ஒருமுறை, கிருஷ்ணரும் பலராமரும் யமுனை நதிக்கரையில் விளையாடிக் கொண்டிருந்தபோது வத்ஸாசுரன் என்ற பெயருடைய அரக்கன் ஒரு கன்றின் வடிவை மேற்கொண்டு இரு சகோதரர்களையும் கொல்லும் நோக்கத்துடன் அங்கு வந்தான். கன்றின் வடிவத்தை எடுத்திருந்ததால் அவன் மற்றக் கன்றுகளுடன் சேர்ந்து கொள்ள முடிந்தது. ஆனால் கிருஷ்ணர் இதைக் கவனித்துவிட்டார், உடனே அரக்கன் வந்திருப்பதை அவர் பலராமருக்குத் தெரிவித்தார். பின்னர் இரு சகோதரர்களும் அமைதியாக அரக்கனை அணுகினார்கள். அரக்கனான கன்றின் இரு பின்னங்கால்களையும் வாலையும் பிடித்த கிருஷ்ணர், மிகுந்த வேகத்துடன் சுழற்றி அடித்து ஒரு மரத்தின் மேல் அவனை வீசி எறிந்தார். உயிரிழந்த அரக்கன் மரத்தின் உச்சியிலிருந்து தரையில் விழுந்தான். அரக்கன் தரையில் இறந்து விழுந்தபோது, "அருமை! அருமை!" என்று கூறி தோழர்கள் கிருஷ்ணரைப் பாராட்டினார்கள், தேவர்கள் மிகுந்த மனமகிழ்ச்சியுடன் ஆகாயத்திலிருந்து மலர் மாரி பொழிந்தனர். பிரபஞ்சப் படைப்பினை காப்பவர்களான கிருஷ்ணரும் பலராமரும் இவ்வாறு ஒவ்வொரு நாளும் காலை வேளை முதல் கன்றுகளைப் பராமரிப்பதில் ஈடுபட்டிருந்தனர், விருந்தாவனத்தின் இடையர் சிறுவர்களாக தங்களது பால்ய லீலைகளில் அவர்கள் இவ்வாறு களித்திருந்தார்கள்.

ஒருநாள், ஆயர் குலச் சிறுவர்கள் அனைவரும் தங்களது கன்றுகளுக்குத் தண்ணீர் காட்டுவதற்காக அவற்றை யமுனை நதிக்கரைக்கு அழைத்துச் சென்றனர். கன்றுகள் யமுனை நதியில் தண்ணீர் குடித்தபோது சிறுவர்களும்



கொக்கு வடிவில் வந்த பகாசுரனை ஸ்ரீ கிருஷ்ணர் வதம் செய்தல்

நீர் அருந்தினார்கள். அவ்வாறு நீர் அருந்திவிட்டு நதிக்கரையில் அவர்கள் அமர்ந்திருந்தபோது, உருவத்தில் கொக்குபோல, ஆனால் மலைபோன்று பெரிய உடலுடைய பறவை ஒன்றைக் கண்டார்கள். அதன் மேற்பகுதி, இடியைப் போன்று பலமானதாக இருந்தது. அந்த அசாதாரண பறவையை அவர்கள் கண்டபோது, அதனால் அச்சமுற்றனர். கம்சனின் நண்பனான அப்பறவையின் பெயர் பகாசுரன். அவ்விடத்தில் திடீரென்று தோன்றிய அவன், உடனடியாக கிருஷ்ணரைத் தன் கூரிய அலகுகளினால் தாக்கி வேகமாக விழுங்கினான். கிருஷ்ணர் அவ்வாறு விழுங்கப்பட்டபோது, பலராமரின் தலைமையிலான அனைத்து சிறுவர்களும் மரணமடைந்ததுபோல மூச்சற்றுப் போனார்கள். ஆனால் பகாசுர அரக்கன் கிருஷ்ணரை விழுங்கியபோது, தொண்டையில் ஏதோ எரிவதுபோல் உணர்ந்தான். இது கிருஷ்ணரின் பிரகாச ஒளியினால் ஏற்பட்டது. அரக்கன் கிருஷ்ணரை உடனடியாக வெளியில் எறிந்துவிட்டுத் தன் அலகுகளால் அவரைக் குத்திக் கொல்ல முயன்றான். கிருஷ்ணர் நந்த மகாராஜரின் குழந்தையாக நடித்தாலும், அவர் பிரபஞ்சத்தின் சிருஷ்டி கர்த்தாவான பிரம்மதேவரின் தந்தையான முழுமுதற் கடவுள் என்பதை பகாசுரன் அறியான். அன்னை யசோதையின் மைந்தன், தேவர்களின் மகிழ்ச்சிக்கான பெட்டகம், சாதுக்களின் காவலர், அந்த மாபெரும் கொக்கின் இரு அலகுகளைப் பிடித்து, ஒரு குழந்தை புல்லைப் பிளப்பது போல், எளிதாக, தன் கோபால நண்பர்களின் முன்னிலையில், அரக்கனின் வாயைப் பிளந்தார். மல்லிகை போன்ற மிகுந்த நறுமணமிக்க மலர்களை ஸ்வர்கலோகவாசிகள் ஆகாயத்திலிருந்து தூவி, தங்களது பாராட்டுதல்களைத் தெரிவித்தனர். மலர் மாரியுடன் இணைந்து தாரைகளும் தப்பட்டைகளும் சங்குகளும் முழங்கின.

மலர் மாரி பொழிவதைக் கண்டும் சுவர்க்கலோக இசையைக் கேட்டும் சிறுவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். மாபெரும் அரக்கனான பகாசுரனின் வாயிலிருந்து கிருஷ்ணர் விடுபட்டதைக் கண்டபோது, பலராமர் உட்பட சிறுவர்கள் எல்லோரும் புத்துயிர் பெற்றது போல் மகிழ்ச்சியடைந்தார்கள். கிருஷ்ணர் தங்களை நோக்கி வருவதை அவர்கள் கண்டமாத்திரத்தில், ஒருவர்பின் ஒருவராய் அந்த நந்தகுமாரனைக் கட்டிப்பிடித்து நெஞ்சுடன் தழுவிக் கொண்டனர். அதன் பின்னர், கன்றுகளையெல்லாம் ஓரிடத்தில் சேகரித்துக் கொண்டு வீடு திரும்பத் தொடங்கினர்.

# ஸ்ரீல பிரபுபாதரின் வெற்றி

**நிருபர்:** தங்களின் இந்த மாபெரும் வெற்றி உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கிறதா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** அனைத்தும் எனது குருமஹாராஜரின் (ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூரின்) ஆசிகள். அவர் எனக்குக் கட்டளையிட்டார், நான் என்னால் முடிந்த அளவிற்கு முயற்சித்தேன். சிறிதளவு வெற்றியும் கிடைத்துள்ளது. நிறைய பக்தர்கள் தோன்றியுள்ளனர், நூற்றுக்கணக்கான கோயில்கள் தோன்றியுள்ளன. பக்தர்கள் அமைதியான வாழ்க்கை வாழ்கிறார்கள், நேர்த்தியான பிரசாதத்தினை ஏற்கின்றனர், புத்தகங்களிலிருந்து அறிவைப் பெறுகின்றனர். மேலும், அவர்களது குணங்களிலும் நடத்தையிலும் முன்னேற்றம் ஏற்படுவதைப் பார்க்கும்போது அஃது எனது வெற்றியை காட்டுகிறது.



**நிருபர்:** நான் உங்களைச் சந்தித்ததில் பெருமை அடைகிறேன். உங்களின் சில புத்தகங்களை நான் படித்திருக்கிறேன், மேலும் படிக்க விரும்புகிறேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம், மனித சமுதாயத்திற்குச் சிறந்த சேவையை அளிக்க நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். இதுவே சேவை எனப்படும். மக்கள் முன்வந்து எங்களுக்கு ஒத்துழைக்க வேண்டும், இந்த இயக்கம் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்குரிய கற்பனையான மத அமைப்பு அல்ல. வாழ்வின் அர்த்தத்தை அறிவியல்பூர்வமாகப் புரிந்துகொள்வதற்கு உதவும் இயக்கம்.

—தி அப்சர்வர் (The Observer)
என்னும் பத்திரிகையின் மதப்
பிரிவின் ஆசிரியருடன் நடந்த
சந்திப்பில்


ஜுலை 23, 1976, இலண்டன்

பிப்ரவரி 22, ஸ்ரீல
பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர்
தோன்றிய நாள்




**கிருஷ்ண கீர்த்தனம் என்பது பணம் சம்பாதிப்பதற்கானது அல்ல, கலைகளைக் காட்டி மக்களுக்கு பொழுதுபோக்கு அளிப்பதும் அல்ல; மாறாக, இது இறைவனுக்கு உற்சாகத்துடன் செய்யப்படும் தொண்டாகும்.**

**—ஸ்ரீல பிரபுபாதர், 12 டிசம்பர் 1967இல் எழுதிய கடிதம்**




## கருத்து

**பல்வேறு உள்நோக்கம் கொண்ட மக்கள், சில சமயங்களில் தூய பக்தியையும் தூய பக்தியைப் பயிற்சி செய்யும் இயக்கங்களின் குறிக்கோள்களையும் அறிய முயல்வார்கள். அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள், கீர்த்தனம், ஹரி கதைக்கான ஏற்பாடுகள், திருநாம உபதேசங்கள் ஆகியவற்றை அவர்கள் அறியும்பட்சத்தில், மனித நலனிற்காக ஏதேனும் சமூகத் தொண்டு நடைபெறுகிறதா? என்று கேட்பார்கள். அத்தகைய மக்கள், ஆன்மீக இயக்கம் என்றால், உணவு, உடை, மற்றும் மருத்துவ வசதிகளை இலவசமாக வழங்குபவர்கள் என்று நினைக்கின்றனர். தூய பக்தியைப் பயிற்சி செய்யும் பக்தர்கள் இத்தகைய பொதுநல சேவைகளில் ஈடுபடுவதில்லை என்று அவர்களிடம் கூறினால், அவர்கள் தூய பக்தர்களை சோம்பேறிகளாகவும் உபயோகமற்றவர்களாகவும் கருதுவர்.**

**உயிர்வாழிகள் அனைவரும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் நிரந்தர சேவகர்கள்; அதை மறந்தமையால், ஜடவுலகின் துன்பங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஸ்ரீ கிருஷ்ணரின் புகழைக் கேட்டு, உயிர்வாழிகள் தங்களது உண்மை நிலையை அறிந்து கொண்டால் மட்டுமே வாழ்வின் துன்பங்களை வேருடன் அழிக்க முடியும். வலியையும் மன உளைச்சலையும் போக்கும் தற்காலிக முயற்சி அவசியமில்லை. கிருஷ்ண நாமத்தின் மகிமையினால், அனைத்துத் துன்பங்களையும் குறைந்த முயற்சியில் வேருடன் அழிக்க முடியும். இதில் ஏழை, பணக்காரன் போன்ற பேதங்கள் இன்றி அனைவருமே நிரந்தர ஆனந்தத்தை அடையலாம். இதன் மூலம், சுயநலன் இல்லாமை, மக்களிடையே இணக்கம், உலகளாவிய அன்பு, சகோதரத்துவம் போன்றவை தானாகவே வளரும், அவற்றிற்குப் பஞ்சமே இல்லை. கோடிக்கணக்கான பணத்தில் சிறிய தொகையை சேகரிப்பது எவ்வளவு எளிமையானதோ அதுபோல, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மீது அன்பும் பக்தியும் செலுத்துபவன் இயற்கையாகவே அனைத்து மக்களின் மீதும் அன்பு செலுத்துவான். உண்மையான பக்தர்கள் சோம்பேறிகளாகவோ சுயநலவாதிகளாகவோ இருக்க முடியாது. கிருஷ்ண பக்தியைப் பரப்புவதில் அவர்கள் தங்களை இரவு பகலாக அர்ப்பணித்துள்ளனர்; நாம் எதிர்பார்க்கும் எல்லா நற்குணங்களும் அவர்களிடம் முழுமையாக நிறைந்துள்ளது.**

## சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன.

# 5000 பக்தர்களுடன் தென்னிந்திய யாத்திரை

ஸ்ரீல பிரபுபாதரின் சீடரும் இஸ்கான் இயக்கத்தின் மூத்த சந்நியாசிகளில் ஒருவருமான தவத்திரு. ராதாநாத ஸ்வாமி அவர்களின் வழிகாட்டுதலின்பேரில், மும்பை சௌபாத்தியில் அமைந்துள்ள இஸ்கான் கோவில் பக்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தென்னிந்திய யாத்திரை கடந்த டிசம்பர் மாதம் 19ஆம் தேதி முதல் ஜனவரி முதல் தேதி வரை சிறப்பாக நடைபெற்றது. கன்னியாகுமரி, இராமேஸ்வரம், ஸ்ரீரங்கம் ஆகிய இடங்களுக்குச் சென்ற 5000க்கும் மேற்பட்ட பக்தர்கள், நாம சங்கீர்த்தனத்திலும் பாகவத கதைகளிலும் முற்றிலும் மூழ்கினர். ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு 500 வருடங்களுக்கு முன்பு மேற்கொண்ட தென்னிந்திய யாத்திரையின் நினைவாக, அதைக் கொண்டாடும் விதத்தில் இந்த யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பக்தர்களின் ஹரி நாம சங்கீர்த்தனம் அவர்கள் சென்ற இடங்கள் அனைத்திலும் இருந்த பொதுமக்களை ஆச்சரியத்திலும் ஆனந்தத்திலும் நிரப்பியது.



கன்னியாகுமரி: தவத்திரு ராதாநாத ஸ்வாமி, ஸ்ரீல பிரபுபாதரின் சீடர்கள் மற்றும் மூத்த பக்தர்களுடன் மேடையில் அமர்ந்து கீர்த்தனம் செய்தல்.



கலி யுக தர்மமான ஹரி நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபட்டபடி ஆனந்த நடனத்துடன் தெருக்களில் வலம் வரும் பக்தர்கள்



ஸ்ரீரங்கம்: ஸ்ரீரங்கத்தைச் சார்ந்த ஸ்ரீ வைஷ்ணவர்களின் சார்பில், தவத்திரு ராதாநாத ஸ்வாமிக்கு அளிக்கப்பட்ட மரியாதை



ஸ்ரீரங்கம்: ஹரி நாம சங்கீர்த்தனத்துடன் ஸ்ரீரங்கத்தின் ரதவீதியில் வலம் வந்த பக்தர்கள் கூட்டத்தின் ஒரு பகுதி

# ஆத்மாவிற்கு விஞ்ஞானப்பூர்வமான ஆதாரம்

1973ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் இலண்டன் ஹரே கிருஷ்ண மையத்தில் தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும், இந்திய மருத்துவர் ஒருவருக்குமிடையே நிகழ்ந்த உரையாடல்.

**மருத்துவர்:** ஆத்மா இருக்கின்றதென்பதை உங்களால் விஞ்ஞானப்பூர்வமாக நிரூபிக்க முடியுமா? நான் சொல்வது என்னவென்றால், இது முழுக்க முழுக்க நம்பிக்கைதானா அல்லது...

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. இது விஞ்ஞானப்பூர்வமான உண்மை. எங்களது விஞ்ஞானம் பக்குவமானது. ஏனெனில், கிருஷ்ணர் என்னும் பக்குவமான மூலத்திலிருந்து நாங்கள் அறிவைப் பெறுகிறோம். மாறாக, விஞ்ஞானிகளின் அறிவு பக்குவமற்ற மூலத்திலிருந்து பெறப்படுவதால், நவீன கால பெயரளவு விஞ்ஞானம் பக்குவமற்றதாகும். நீங்கள் எவ்வளவு பெரிய விஞ்ஞானியாக இருப்பினும், உங்களது புலன்கள் குறைபாடுடையவை என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும்.

**மருத்துவர்:** ஆம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** குறைபாடுகளுடைய புலன்களால் குறைபாடுடைய அறிவையே தர முடியும். விஞ்ஞான அறிவு என்று நீங்கள் கூறுவது போலியாகும். ஏனெனில், அந்த அறிவினை உண்டாக்கிய மனிதர்கள் குறையுடையவர்கள். குறையுள்ள மனிதர்களிடமிருந்து குறையற்ற அறிவை எவ்வாறு பெற முடியும்?

**மருத்துவர்:** எந்த அளவிற்கு குறைபாடுள்ளது என்பதைப் பொருத்தே இதை முடிவு செய்ய முடியும்.



**மனம் கண்களுக்குப் புலப்படாமல் சூட்சுமமாக உள்ளபோதிலும், அஃது இருப்பதை ஏற்றுக் கொள்கிறோம். அதுபோல, மனதைக் காட்டிலும் சூட்சுமமான ஆத்மா இருப்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

**ஸ்ரீல பிரபுபாதர்:** என்னுடைய கருத்து என்னவெனில், உங்களால் குறையற்ற அறிவைத் தர முடியாத நிலையில், உங்களிடமிருந்து அறிவைப் பெறுவதால் என்ன பயன்?

**மருத்துவர்:** சரி, இக்கருத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் ஆத்மா இருப்பதை நீங்கள் எப்படி நிரூபிப்பீர்கள்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** குறையற்ற மூலமாகிய கிருஷ்ணரிடமிருந்தோ, கிருஷ்ணரின் வார்த்தைகளை திருப்பிச் சொல்லும் கிருஷ்ணரின் பிரதிநிதியிடமிருந்தோ தகவல்களை எடுத்துக் கொள்ளுங்கள். இவையே எங்களது சாட்சிகள். *ஏவம் பரம்பரா-ப்ராப்தம்,* ''தெய்வீக ஞானம் குரு சீடப் பரம்பரையின் மூலமாகப் பெறப்பட வேண்டும்.'' நாங்கள் அயோக்கியனிடமிருந்து வரும் அறிவை ஏற்பதில்லை; முழுமுதற் கடவுளாகிய கிருஷ்ணரிடமிருந்து வரும் அறிவையே ஏற்கிறோம். நான் ஒரு அயோக்கியனாக இருக்கலாம், ஆனால் பக்குவமான நபரிடமிருந்து ஞானத்தைப் பெற்று அதை அப்படியே திருப்பிச் சொல்வதால், நான் சொல்பவை அனைத்தும் பக்குவமானவை.

குழந்தை அறியாத அப்பாவியாக இருக்கலாம். ஆனால் அக்குழந்தை ஒரு பொருளை மேஜை என கற்றறிந்து, ''அப்பா, இஃது ஒரு மேஜை,'' என்று சொல்லும்போது, அதனுடைய வார்த்தைகள் பக்குவமானவை. அதுபோல பக்குவமான நபரிடமிருந்து கேட்டு, அதில் நம்பிக்கை வைத்தால், உங்கள் அறிவு பக்குவமானதாகும். *ததா தேஹாந்தர-பிராப்தி:,* ''மரணத்திற்குப் பிறகு ஆத்மா மற்றொரு ஜடவுடலில் நுழைகிறது,'' என்று கிருஷ்ணர் கூறுகிறார். நாங்கள் அதனை ஒப்புக் கொள்கிறோம். பக்குவமற்ற பெயரளவு விஞ்ஞானிகளிடமிருந்து இதற்கு எங்களுக்கு ஆதாரம் தேவையில்லை.

**மருத்துவர்:** எனவே, நம்பிக்கை என்னும் கேள்வி முதலில் எழுகிறது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இது வெறும் நம்பிக்கையல்ல, உண்மை.

**மருத்துவர்:** இருக்கலாம், ஆனால் அந்த உண்மையை நீங்கள் எப்படி நிரூபிப்பீர்கள்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** கிருஷ்ணர் அதை சொல்கிறார். அதுவே நிரூபணம்.

**மருத்துவர்:** (ஏளனமாக) ''இது கிருஷ்ணரால் சொல்லப்பட்டது.'' ஆனால்...

**ஸ்ரீல பிரபுபாதர்:** இதுவே எங்களது வேத சாட்சி. நாங்கள் ஏதாவது சொல்லும்போது, அதை ஆதரிக்கும் வேத இலக்கியத்தை உடனடியாக மேற்கோள் காட்டுகிறோம். இதுவே எங்களது நிரூபண முறை, இது நீதிமன்றத்தில் வாதிடுவதைப் போன்றது. வக்கீல் ஒருவர் நீதிமன்றத்தில் வாதாடும்போது, அவர் முந்தைய தீர்ப்புகளை மேற்கோள் காட்டுவது மரபு. அப்போதுதான் அவரது வாதம் சட்ட நிரூபணமாக நீதிபதியால் ஏற்றுக் கொள்ளப்படும். அதுபோலவே நாங்கள் ஏதாவது சொல்லும்போது வேத இலக்கியத்தின் ஆதாரத்தை உடனடியாக குறிப்பிடுகிறோம். ஆன்மீக விஷயங்களை நிரூபிப்பதற்கு இதுவே முறையான வழி. இல்லையெனில், சாஸ்திரங்கள் (சமய நூல்கள்) எதற்காக உள்ளன? அவை மனக் கற்பனையால் உருவானவையாக இருப்பின், அப்புத்தகங்களின் பயன்தான் என்ன? வேத இலக்கியங்கள் பூரண உண்மையை தக்க தர்க்கங்களுடனும் ஆதாரங்களுடனும் தெரிவிக்கின்றன என்பதையும் நாம் உணர வேண்டும். உதாரணமாக, பகவத் கீதையில் (2.13) கிருஷ்ணர் கூறுகிறார்:

*தேஹினோ 'ஸ்மின் யதா தேஹே கௌமாரம் யௌவனம் ஜரா*
*ததா தேஹாந்தர-பிராப்திர் தீரஸ் தத்ர ந முஹ்யதி*

''ஆத்மா தனது உடலை குழந்தைப் பருவத்திலிருந்து இளமைக்கும், பின்னர் இளமையிலிருந்து முதுமைக்கும் மாற்றுகின்றது. அதுபோன்று மரணத்தின்போது ஆத்மா வேறு உடலினுள் நுழைகின்றது.'' இஃது எதார்த்தமானதாக இல்லையா? இது விஞ்ஞானப்பூர்வமானது. அறிவாளிகளுக்கு இது விஞ்ஞானப்பூர்வமான ஆதாரம். இவ்விளக்கத்திற்கு பிறகும் ஒருவன் அறிவின்றி மந்தமாக இருந்தால் என்ன செய்ய இயலும்?

**மருத்துவர்:** ஆனால் ஆத்மா கண்ணுக்கு புலப்படாத நிலையில், ஆத்மா இருக்கிறது என எப்படி உறுதியாக சொல்கிறீர்கள்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஏதேனும் ஒன்று கண்ணுக்கு புலப்படவில்லை என்பதால் மட்டும், அஃது இருப்பதை நம்மால் அறிந்துகொள்ள இயலாது என்று பொருளல்ல. மனம், புத்தி, அஹங்காரம் ஆகியவற்றால் ஆன சூட்சும உடல்கூட உங்கள் கண்களுக்குப் புலப்படுவதில்லை, ஆனால் சூட்சும உடல் உள்ளது என்பதை நீங்கள் அறிவீர். நமக்கு இருவிதமான உடல்கள் உள்ளன: (1) நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றினால் ஆன ஸ்தூல உடல் (2) மனம், புத்தி, அஹங்காரம் ஆகியவற்றினால் ஆன சூட்சும உடல். நிலம், நீர் முதலியவற்றால் உருவாக்கப்பட்ட ஸ்தூல உடலை உங்களால் காண முடியும், ஆனால் சூட்சும உடலை உங்களால் காண முடியுமா? மனதை உங்களால்

காண முடியுமா? அல்லது உங்கள் புத்தியைத்தான் காண முடியுமா? இருப்பினும், உங்களுக்கும் மனம் உண்டு, எனக்கும் மனம் உண்டு என்பதை அனைவரும் அறிவார்கள்.

**மருத்துவர்:** இவை கிரகித்து உணரக்கூடியவை, தாங்களும் அறிவீர்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. கிரகிக்கப்படுபவை அல்ல, சூட்சுமமானவை, இவற்றைப் பார்க்கக்கூடிய கண்கள் உங்களிடம் இல்லை.

**மருத்துவர்:** உம். புத்தியைப் பற்றி அறிய தற்போது மூன்று முறைகள் உள்ளன.

**ஸ்ரீல பிரபுபாதர்:** எப்படியிருப்பினும், சூட்சும உடலை உங்களால் காண முடியாவிட்டாலும், அஃது இருக்கின்றது என்பதை நீங்கள் ஏற்கின்றீர்கள். இதுவே என்னால் சுட்டிக்காட்டப்படும் கருத்து. அதுபோல நீங்கள் பார்க்க முடியாவிட்டாலும், ஆத்மா இருப்பது உண்மையே. ஆத்மாவானது சூட்சும, ஸ்தூல உடல்களால் மறைக்கப்பட்டுள்ளது. ஸ்தூல உடலின் அழிவே மரணம் என்று அறியப்படுகிறது. அழியாமல் நிற்கும் சூட்சும உடல், ஆத்மாவை அடுத்த இடத்திற்குக் கொண்டுச் செல்கிறது. அங்கு அவன் தனது மனதின் ஆசைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு ஏற்ற ஸ்தூல ஜடவுடலை மீண்டும் வளர்க்கின்றான்.

**ஆங்கிலேய விருந்தினர்:** சூட்சும உடலும் ஆத்மாவும் ஒன்று என்கிறீர்களா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. ஆத்மாவானது சூட்சும உடலிலிருந்து வேறுபட்டதாகும். ஆத்மா மனதைக் காட்டிலும் சூட்சுமமானது. இவையனைத்தும் பகவத் கீதையில் (3.42) விளக்கப்பட்டுள்ளன:


*இந்த்ரியானி பரான்யாஹுர் இந்த்ரியேப்ய: பரம் மன:*
*மனஸஸ் து பரா புத்திர் யோ புத்தே: பரதஸ் து ஸ:*

முதலில் நாம் நமது வெளிப்புற அறிவின்படி, உடலின் புலன்களை மட்டுமே அறிகின்றோம். விலங்குகளைப் போன்றவர்கள் புலன்களே எல்லாம் என நினைக்கின்றனர். புலன்கள் மனதால் கட்டுப்படுத்தப்பட்டிருப்பது அவர்களுக்குத் தெரியாது. ஒருவனின் மனம் பேதலித்துவிட்டால், அவனது புலன்கள் செயல்பட முடியாது; அவன் பைத்தியமாகிறான். எனவே, மனமே புலன்களைக் கட்டுப்படுத்துகிறது. மனதைவிட மேலானது புத்தியாகும். புத்திக்கும் உயர்வானது ஆத்மாவாகும்.

நம்மால் மனதையும் புத்தியையும்கூட பார்க்க முடியவில்லை. அப்படியிருக்க ஆத்மாவை எவ்வாறு பார்க்க முடியும்? அவ்வாறு பார்க்கமுடியாவிடினும், ஆத்மா இருப்பதும், அதற்கென்று ஓர் அளவு இருப்பதும் உண்மையே. மேலும், ஆத்மாவைப் பற்றிய அறிவு ஒருவனுக்கு இல்லையெனில், அவன் மிருகத்தைவிட மோசமானவன் ஆவான். ஏனெனில், அவன் தன்னைத் தனது ஸ்தூல, சூட்சும உடல்களால் அடையாளப்படுத்திக் கொள்கின்றான்.

# சரணாகதி ஒரு விளக்கம்

## (ஸ்ரீல பிரபுபாதரின் லீலாம்ருதம் என்னும் புத்தகத்தில் இருந்து)



கையை உயர்த்திய கோவிந்த தாஸி, "பிரபுபாதரே, சரணடைதல் என்பதன் உண்மையான பொருள் என்ன?" என்று வினவினாள்.

"நான் ஒன்றுமில்லாதவன் என்பதை அறிவதே சரணாகதி," என்று பிரபுபாதர் பதிலளிக்க, அவரது கருத்துக்களை குறிப்பெடுக்கும் பழக்கம் கொண்ட கோவிந்த தாஸி அதனை எழுதிக் கொண்டாள், பிரபுபாதரின் மேஜையின் அருகில் அமர்ந்திருந்த சில பக்தர்களும் கதவின் அருகில் நின்று கொண்டிருந்த இதர பக்தர்களும் அவர் கூறுவதை உன்னிப்பாக கவனித்தனர். பிரபுபாதர் தொடர்ந்தார்: "நான் பன்றியின் மலத்தைக் காட்டிலும் தாழ்ந்தவன் என்பதையும் கிருஷ்ணரோ மிகப் பெரியவர் என்பதையும் நான் உணர வேண்டும். அது மிகவும் கடினமானது. இலட்சக்கணக்கான ஐசக் நியூட்டனையும் ஐன்ஸ்டீனையும் பார்த்துவிடலாம்; ஆனால் கிருஷ்ணரிடம் சரணடைந்த ஆத்மாவைப் பார்ப்பது மிகவும் அரிது. ஏனெனில், அது கடினமானது. 'அவன் என்னைவிட அறிவில் சிறந்தவன், அல்லது நான் அவனைவிட அறிவில் சிறந்தவன்,' என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கும்வரை அது கடினமானது. நான் ஒன்றுமில்லாதவன் என்பதை உணர்ந்து நீங்கள் சரணடைய வேண்டும்."

—மாண்ட்ரியலில் ஒரு கோடைக்காலம், 1968 என்ற அத்தியாயத்தில் இருந்து

# சென்னையில் ஸ்ரீ ஜகந்நாதர் ரதயாத்திரை

ஜனவரி 14, 2011: இஸ்கான் சென்னை சார்பில் வருடாந்திர ஸ்ரீ ஜகந்நாதர் ரதயாத்திரை சென்னையின் சாலைகளில் கோலாகலமாக நடந்தேறியது. இஸ்கான் சென்னை கோவிலில் வீற்றுள்ள ஸ்ரீ ஜகந்நாதர், தனது சகோதர சகோதரிகளான பலதேவர், சுபத்ரையுடன் அற்புதமாக வடிவமைக்கப்பட்டிருந்த ரதத்தில் எழுந்தருளினார். சென்னை மைலாப்பூரிலுள்ள புகழ்பெற்ற கபாலீஸ்வரர் கோவிலில் தொடங்கி ராதாகிருஷ்ணன் சாலை, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை வழியாக சேத்துபட்டில் உள்ள குசலாம்பாள் கல்யாண மஹாலை தேர் வந்தடைந்தது. தவத்திரு. பானு ஸ்வாமி, தவத்திரு. பக்தி விரஜேந்திர நந்தன ஸ்வாமி, தவத்திரு. பக்தி புருஷோத்தம ஸ்வாமி, தவத்திரு. சுகதேவ ஸ்வாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற ரதயாத்திரையில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு ஸ்ரீ ஜகந்நாதரின் அருளைப் பெற்றனர். தமிழகம் மட்டுமின்றி தென்னிந்தியாவின் இதர பகுதிகளிலிருந்தும் கூடிய பக்தர்கள், ஹரி நாம சங்கீர்த்தனம், பிரசாத விநியோகம், புத்தக விநியோகம் என பல்வேறு தொண்டுகளில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.



ரதயாத்திரையுடன் இணைந்து நடைபெற்ற மனதைக் கவரும் ஹரி நாம சங்கீர்த்தனத்தில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டுள்ள பக்தர்கள்





**மேலே:** பிரம்மாண்டமான ரதத்தின் முன்புற தோற்றம்
**இடது:** குசலாம்பாள் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்ட "மிருகாரி, பக்தனாக மாறிய வேடன்" நாடகத்தின் ஒரு காட்சி.

# பிரபுபாதர் நூற்றந்தாதி

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமத்தினை உலகெங்கிலும் பரப்பி ஆன்மீக உலகில் புரட்சியை ஏற்படுத்திய ஸ்ரீல பிரபுபாதரைப் புகழ்ந்து, அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வண்ணம் எழுதப்பட்டதே இந்த "பிரபுபாதர் நூற்றந்தாதி". எளிய தமிழில் இயற்றப்பட்டுள்ள இந்த குற்றமற்ற வெண்பாக்கள் வானில் மிதந்து மேவிவரும் பொருட்டு இங்கு இதனை தொடர்ந்து பிரசுரித்துக் கொண்டுள்ளோம். முதல் செய்யுளின் இறுதியை அடுத்த செய்யுளின் ஆரம்பமாகக் கொண்டு அழகிய அந்தாதியின் வடிவிலுள்ள இந்த 108 வெண்பாக்கள் மக்களின் கருவில் புகுந்து மாபெரும் பக்தரான ஸ்ரீல பிரபுபாதரின் பொன் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நிற்பதற்கான தகுந்த இடத்தை ஏற்படுத்துவது உறுதி.

**வழங்கியவர்: தயாள் கோவிந்த தாஸ்**

## பகுதி 6

**வாழ்ந்துலகிற் தம்மனத்தை வாக்கை உடம்பினைத்**
**தாழ்வின்றி அர்பணித்தார் தாம்பழுந்திச்– சூழ்இடைத்**
**தாமோ தரன்பாற், தகவுசாற்சீ வன்முத்தர்,**
**நாமோத வேண்டும் நயந்து. (61)**

இந்த உலகத்தில் வாழ்ந்து, தம் மனத்தை, வாக்கை மற்றும் உடம்பினைத் தாம்புக் கயிறு அழுந்திய இடையை உடைய தாமோதரன்பால் அர்பணித்தார். பெருமை மிக்க வீடுபேறு பெற்ற பிரபுபாதர் அவர்களை நாம் விரும்பிப் பாட வேண்டும்.

**நயந்துதன் சொல்வளத்தால், நானா அறிஞர்**
**வியந்துலகில் வித்தகத்தைப் போற்ற– மயர்வறுக்கும்**
**தொல்மறையின் ஒண்பொருளைத் தோண்டி உணர்த்திடும்**
**வல்லமைசால் ஆசானை வாழ்த்து. (62)**



உலகெங்கிலும் தான் அமைத்த கோவில்களில் பூர்வ ஆச்சாரியர்களின் வழியில் கிருஷ்ணரின் வழிபாட்டை வழங்கிய ஸ்ரீல பிரபுபாதர்

தன்னுடைய சொல்வளத்தினால், உலகில் உள்ள அறிஞர்கள் பலரும் வித்தகத்தைப் (புலமையைப்) பாராட்டும் வண்ணம், நமது அறியாமையை அறுத்திடும் பழமையான வேதத்தின் ஒப்பற்ற பொருளை எடுத்து உணர்த்தினார். அத்தகைய வல்லமை மிகுந்த ஆச்சாரியனை வாழ்த்துவாயாக.

**வாழ்த்திடச் சீலகுணம் வானளவு கொண்டாரை**
**வாழ்த்திட வக்கில்லேன் வாயில்லேன்– ஊழ்வினையேன்**
**கண்ணா மதியினாற் காணேன், இதயத்துள்**
**வண்ணவழி தாழ்ந்தேன் வகு. (63)**

வாழ்த்துவதற்கு அழகான குணங்கள் வானளவு கொண்டவரான பிரபுபாதர் அவர்களை வாழ்த்துவதற்கு வழியும் சொற்களும் இல்லாதிருக்கின்றேன். ஊழ்வினையால் பாதிப்புற்ற யான் எனது அறிவு கொண்டு எதையும் காண இயலவில்லை. ஆகையினால் கண்ணனே உன் காலடியில் வீழ்கின்றேன். நல்ல வழியை இதயத்துள் வகுப்பாயாக.

**வகுத்து வழியொழுகி வந்தனை செய்யத்**
**தொகுத்துத் திருவொழுகு தந்தார்– புகுந்த**
**புதுவொழுகு நீர்மையாற் பூவுலகில் நிற்கும்**
**மதுசூ தனன்மகிழு மாறு. (64)**

தாம் அமைத்த மையங்களில் கண்ணன் வழிபாட்டிற்கான முறைகளை பூர்வ ஆச்சாரியர்கள் வழியில் நின்று தொகுத்துத் தந்தார். அவர் ஏற்படுத்திய புதுமையான முறை எதுவாயினும் சிறப்புற்றதாக இப்பூவுலகில் மதுசூதனன் மகிழுமாறு நிலைக்கும்.

**மாறுபட் டாற்றுகின்ற மண்ணின் அறிவியலார்**
**கூறுகின்ற கொள்கை குறித்தெழுந்தார்– ஏறுபோற்**
**தோன்றும் உயிரனைத்தும் தோன்றமுதற் காரணம்**
**ஆன்ற உயிரென்றார் ஆர்த்து. (65)**

வேதக் கருத்துக்களுக்கு மாறுபட்டு, ஜடத்தில் இருந்து உயிர் தோன்றுகிறது என்ற கருத்துக்களை வெளியிடும் இம்மண்ணிலுள்ள அறிவியல் அறிஞர்களின் கொள்கையை எதிர்த்தார். உயிரிலிருந்தே உயிர் தோன்றுகிறது என்று சிங்கம்போல் ஒலித்தார்.

**ஆர்த்தெழும் மேக மகிலஞ் செழித்தோங்கப்**
**பார்த்த இடமெங்கும் பெய்தற்போற்– போர்த்திடும்**
**ஊன்நிற்கு மாத்ம உணர்வோங்கப் பெய்தார்மேல்**
**வான்நிற்கும் மாதவனின் வாக்கு. (66)**

ஒலித்து எழுகின்ற மேகமானது உலகம் செழிக்க எல்லா இடங்களிலும் மழையைப் பெய்வித்தல் போல, ஊனுடம்பினால் போர்த்தப்பட்டுள்ள ஆத்மாவின் உணர்வானது சிறப்படைய கோலோக மாதவனின் வாக்குகளை எடுத்து எங்கும் பெய்தார்.

**வாக்கினால் உய்விக்கும் வாஞ்சையால் வல்லிருளை**
**ஊக்கம் தளரா துடற்றினார்– ஆக்கம்**
**அடியார்பால் ஓங்கிட ஆந்தனையு மாற்றி**
**நெடியபய ணம்செய்தார் நெய்து. (67)**

தன்னுடைய வாக்கினாலும் கட்டுண்ட ஆத்மாக்களை உய்விக்க வேண்டுமென்ற பிரியத்தினாலும், வன்மையான இருளை ஊக்கம் தளராது துரத்தினார். அடியவர்களிடத்தில் முன்னேற்றம் ஓங்கிடப் பெரும் முயற்சி செய்து, நீண்ட பயணங்கள் மேற்கொண்டார்.

**நெய்கருவி நூற்கொண்டு நேர்தற்போல், நூற்கொண்டு**
**மெய்தழுவிப் பல்சுற்று மேற்கொண்டார்– பொய்யுலகிற்**
**கீர்த்திமிகு பொய்யாக் கிருட்ண உணர்வினைப்**
**போர்த்தினார் கைகட் புணர்த்து. (68)**


நெய்கின்ற கருவியானது நெய்யும் நூலைத் தன்னிடம் கொண்டு நூல்களைச் சந்திப்பது போல், பிரபுபாதர் அவர்கள் தான் எழுதிய நூல்களைக் கையில் கொண்டு, உண்மைப் பொருளைத் தழுவி உலகைப் பலமுறைச் சுற்றி வந்தார். இந்தப் பொய்யான உலகில், சிறப்புமிக்க, பொய்யாத கிருஷ்ண உணர்வினைப் பல ஆத்மாக்களையும் ஒன்றுசேர்த்துப் போர்த்தினார்.

**புணர்த்தார் உலகைப் புரையிற் தளத்தில்**
**உணர்த்தினார் உண்மை ஒளிர– உணர்த்தினார்**
**ஐக்கிய நாடுகளின் ஆன்ற சபையென்று**
**வைக்கும் இயக்கம் வளர்த்து. (69)**

உலகில் உள்ளவர்களைக் குற்றமற்ற தளத்தில் ஒன்று சேர்த்தார். ஒளிரும்படியாக உண்மைப் பொருளை உணர்த்தினார். தாம் ஏற்படுத்திய அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கமே உண்மையில் ஐக்கிய நாடுகள் சபை என்பதை உணர்த்தினார்.

**வளரும் இயக்கம்கார் வாமனன்போல் ஓங்கி**
**அளவில் அருள்மண்ணிற் பெய்யத்– தளராது**
**அல்லும் பகலுங்கூர்ந் தாய்ந்தளித்த வேதாந்தர்**
**சொல்வளமே யாம்கொள்ளும் சொத்து. (70)**

வளரும் இயக்கமானது வாமன அவதாரம்போல் ஓங்கி உயர்ந்து இந்த மண்ணில் அருள்மழை பெய்திருக்க, இரவும் பகலும் அயராது வேத இலக்கியங்களைக் கூர்ந்து ஆராய்ந்து



நம்முடைய சூழ்வினைகளைப் போக்கும் சொற்களை நூல்களாக அளித்த ஸ்ரீல பிரபுபாதர்

பக்திவேதாந்தர் நமக்கு அளித்துள்ள சொல்வளமே யாம் ஏற்றுக்கொள்ளும் சொத்தாகும்.


**சொத்தாகும் சூழ்வினை சோர்ந்தொழியச் சொல்வடித்தார்**
**பத்தா யிரமாண்டு பாரினிற்சித்– தித்து**
**இலங்குநூ லென்றாகி இவ்வுலகீ டேற,**
**இலங்குநூல் மார்பில் இருந்து. (71)**

நம்மிடத்தில் சொத்தாக உள்ள சூழ்வினை சோர்ந்து ஒழிவதற்குச் சிறப்பான சொற்கள் கொண்டு நூல்கள் எழுதிக் கொடுத்தார். அந்நூல்கள் ஒளிபெறச் செய்யும் நூல்கள் என்று சிறப்புப்பெற்று, இவ்வுலக மக்கள் ஈடேறப் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு இருக்கும்.

**இருந்து பரம்பரையில் இன்மொழிகள் செய்தார்**
**கருணை பெருமளவுங் காட்டி– மருவிடக்**
**கண்ணன் உணர்வினைக் கைக்கனிபோற் கொண்டுவைத்த**
**வண்ணத்தைப் போற்றுவம்யாம் வாழ்ந்து. (72)**

பெரும் கருணை காட்டி, சைதன்ய மஹாபிரபுவின் பரம்பரையில் நிலைத்து, இனிய மொழிகொண்டு நூல்கள் செய்தார். நம்மிடம் பொருந்தும்படியாகக் கண்ணன் உணர்வினை மாறாது கைக்கனிபோல் கொண்டுவைத்தார். அந்த வண்ணத்தை யாம் வாழ்ந்து போற்றுவோம். (தொடரும்)

*தயாள் கோவிந்த தாஸ் M.Tech., Ph.D அவர்கள், திருச்சியிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலையில் பொது மேலாளராகப் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பயிற்சி செய்து வருகிறார்.*




# பகவத் கீதை உண்மையுருவில் —ஒரு கண்ணோட்டம்

## அத்தியாயம் இரண்டு




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய "பகவத் கீதை உண்மையுருவில்," 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய அறிமுகத்தினையும் முதல் அத்தியாயத்தையும் சென்ற இதழ்களில் கண்டோம். இந்த இதழில் **இரண்டாம் அத்தியாயத்தையும்** இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

# கீதையின் உட்பொருள் சுருக்கம்

### முதல் அத்தியாயம்—சில வரிகளில்

போரிடுவதற்காக குருக்ஷேத்திரத்தில் கூடியவர்கள் என்ன செய்தனர் என்ற திருதராஷ்டிரரின் கேள்வியுடன் பகவத் கீதை தொடங்குகின்றது. இருதரப்பு சேனைகளின் பலத்தை துரியோதனன் மதிப்பிட, பீஷ்மர் தனது சங்கை முழங்கி அவனை மகிழ்வித்தார். வெற்றிக்கான அனைத்து அறிகுறிகளும் பாண்டவர்களின் பக்கமிருக்க, தனது பக்தனுக்காக தேரோட்டியின் பணியை ஏற்றிருந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் ரதத்தை இருதரப்பு சேனைகளுக்கு மத்தியில் நிறுத்துமாறு அர்ஜுனன் வேண்டினான். சேனைகளுக்கு மத்தியில் வந்த அர்ஜுனன், உறவினர்களைக் கண்டு, பாசத்தால் மூழ்கி, தன்னால் போரிட இயலாது என்பதற்குப் பல்வேறு காரணங்களைக் கூறி, சோகத்தால் மூழ்கியபடி ரதத்தில் அமர்ந்துவிட்டான்.

### அர்ஜுனனின் இதர சந்தேகங்களும் சரணடைதலும்

இரண்டாம் அத்தியாயத்தின் தொடக்கத்தில், கண்ணீர் மல்க அமர்ந்திருந்த அர்ஜுனனைக் கண்ட ஸ்ரீ கிருஷ்ணர் தனது உபதேசத்தை மெல்ல ஆரம்பித்தார். கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் பேசும்போதெல்லாம், ஸ்ரீ பகவான் உவாச என்று கூறப்பட்டுள்ளது. பிரம்மன், பரமாத்மா, பகவான் என்று மூன்று நிலைகளில் உணரப்படும் பரம்பொருளின் இறுதிநிலை பகவான் எனப்படுகிறது. செல்வம், புகழ், பலம், அழகு, அறிவு, தியாகம் ஆகிய ஆறு ஐஸ்வர்யங்களையும் முழுமையாக பெற்றிருப்பதால், ஸ்ரீ கிருஷ்ணர், இங்கே பகவான் என்று அழைக்கப்படுகிறார். அவருக்கு சமமாகவோ அவரைவிட உயர்வாகவோ யாரிடமும் இந்த ஐஸ்வர்யங்கள் இல்லை என்பதால், கிருஷ்ணரே பகவான், முழுமுதற் கடவுள்—இவ்வுண்மை, கீதை முழுவதும் வியாபித்துள்ளது.

அர்ஜுனனிடம் திடீரென்று எழுந்துள்ள இத்தகு களங்கங்கள் பண்புள்ள மனிதனுக்கு உகந்தவை அல்ல என்றும் அவமானத்தைக் கொடுப்பவை என்றும் கூறிய ஸ்ரீ கிருஷ்ணர், அற்பமான பலவீனத்தை விட்டுவிட்டு போரிடும்படி அறிவுறுத்தினார். ஆனால் அர்ஜுனனோ தனது வாதத்தைத் தொடர்ந்தான்: "எதிரில் நிற்பவர்கள் எனது வழிபாட்டிற்குரிய பீஷ்மரும் துரோணரும். எதிரிகளைக் கொல்லும் கிருஷ்ணா, நீ உமது ஆசிரியரான சாந்திபனி முனிவரையும் பாட்டனாரான உக்ரசேனரையும் கொல்வாயா?" மேலும், இந்த மஹாத்மாக்களைக் கொன்று வாழ்வதைக்காட்டிலும் பிச்சையெடுப்பதே மேல் என்றும், அவர்கள் கொல்லப்பட்டால் தாம் அனுபவிப்பவை அனைத்திலும் இரத்தக்கறை படிந்திருக்கும் என்றும் உரைத்தான்.

இவ்வளவு காரணங்களைக் கண்டபோதிலும், போரிடுதல் தனது கடமை என்பதையும் உணர்ந்திருந்த காரணத்தால், என்ன செய்வதென்று தனக்குப் புரியவில்லை என்று கூறி, தன் குழப்பத்திற்குத் தீர்வு கொடுங்கள் என்று மன்றாடியவண்ணம் அர்ஜுனன் தன்னை பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் சீடனாக ஒப்படைத்தான். அர்ஜுனனைப் போன்ற மிகச்சிறந்த தகுதிவாய்ந்த நபராக இருந்தாலும், வாழ்வின் குழப்பங்களுக்குத் தீர்வு ஏற்பட பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடம் அல்லது அவரது முறையான பிரதிநிதியிடம் சீடனாக சரணடைவது அவசியம் என்பதை இச்செயலிலிருந்து நாம் அறியலாம். "கோவிந்தா, நான் போரிட மாட்டேன்," என்று கூறி அமைதியான அர்ஜுனனிடம் ஸ்ரீ கிருஷ்ணர் புன்சிரிப்புடன் கீதையை உபதேசிக்கத் தொடங்கினார்.

## நீ இந்த உடலல்ல, ஆத்மா

அர்ஜுனன் தன்னிடம் சரணடைந்த சீடன் என்பதால், நட்பு ரீதியிலான அனைத்து வார்த்தைகளையும் கைவிட்ட பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், உடனடியாக குருவின் ஸ்தானத்தை ஏற்று, "பண்டிதனைப் போல நீ பேசினாலும், வருத்தப்பட வேண்டாதவற்றிற்காக வருத்தப்படுவதால், உண்மையில் நீ ஒரு முட்டாள்; அறிஞர்கள் இருப்பவர்களுக்காகவும் இறந்தவர்களுக்காகவும் வருந்துவதில்லை" என்று தனது சீடனைக் கண்டிக்கின்றார். போரினால் உறவினர்கள்



குழம்பிய நிலையில் சீடனாக சரணடைந்த அர்ஜுனனிடம் கிருஷ்ணர் புன்சிரிப்புடன் உபதேசிக்கத் தொடங்குதல்


### ஆத்மாவின் பல்வேறு குணங்கள்

| | |
|---|---|
| அவினாஷி | - அழிக்க இயலாதது (17) |
| அவ்யயஸ்ய | - அழியாதது (17) |
| நித்யஸ்ய | - நித்தியமானது (18) |
| அப்ரமேயஸ்ய | - அளக்க இயலாதது (18) |
| ந ஹன்யதே | - கொல்லப்படுவதில்லை (19) |
| அஜ: | - பிறப்பற்றது (20) |
| ஷாஷ்வத: | - நிரந்தரமானது (20) |
| புராண: | - மிகப் பழமையானது (20) |
| ந சிந்தந்தி | - துண்டுகளாக வெட்ட இயலாதது (23) |
| ந தஹதி | - எரிக்க இயலாதது (23) |
| ந க்லேதயந்தி | - நனைக்க இயலாதது (23) |
| ந ஷோஷயதி | - உலர்த்த இயலாதது (23) |
| அச்சேத்ய: | - உடைக்க இயலாதது (24) |
| ஸர்வகத: | - எங்கும் பரவியுள்ளது (24) |
| ஸ்தாணு: | - மாற்றமில்லாதது (24) |
| அசல: | - நகர்த்த இயலாதது (24) |
| ஸனாதன: | - நித்தியமாக மாற்றமில்லாதது (24) |
| அவ்யக்த: | - கண்ணில் தெரியாதது (25) |
| அசிந்தய: | - புரிந்துகொள்ள இயலாதது (25) |
| அவிகார்ய: | - மாற்றமில்லாதது (25) |
| ஆஸ்சர்ய-வத் | - ஆச்சர்யமானது (29) |
| அவத்ய: | - கொல்லப்பட முடியாதது (30) |

அடைப்புக்குறியில் உள்ளவை ஸ்லோகத்தின் எண்களாகும்

இறந்துவிடுவர் என்று நினைத்த அர்ஜுனனிடம், "நீயோ, நானோ, இங்குள்ள மன்னர்களோ இல்லாமலிருந்த காலம் எதுவுமில்லை, இனி இருக்கப்போவதும் இல்லை," என்று கூறி, உடல் மட்டுமே அழிவிற்கு உட்பட்டது என்றும், உடலுக்குள் இருக்கும் ஆத்மா அழிவற்றது என்றும் விளக்கினார்.

இதுவே ஆன்மீக ஞானத்தின் முதல் பாடமாகும். இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவரும் தன்னை இந்த உடலாக நினைத்து, உடல் சம்பந்தமுடைய விஷயங்களை தன்னுடையதாக நினைத்துக் கொண்டுள்ளனர். அதன்படி, ஒவ்வொருவரும் தனது வீடு, மனைவி, மக்கள், உறவினர், நிலம், நாடு, ஜாதி, மதம் என்று தங்களை அடையாளம் கண்டு கொண்டுள்ளனர். ஆனால் இத்தகு அடையாளங்கள் அனைத்தும் உடலைச் சார்ந்தவை. நாம் இந்த உடலே அல்ல என்னும்பட்சத்தில், இவ்வடையாளங்கள் அனைத்தும் போலியான அடையாளங்களே. ஆத்மாவை யாராலும் கொல்ல முடியாது, உடல் அழியும்போது ஆத்மா அழிவதில்லை. எந்த ஆயுதத்தினாலும் ஆத்மாவை வெட்டவோ, எரிக்கவோ, உலர்த்தவோ, நனைக்கவோ முடியாது.



*சிறுவயது, இளமை, முதுமை ஆகிய பருவங்களைக் கடந்து செல்லும் ஆத்மா, மரணத்தின் போது மற்றொரு உடலை அடைகிறான்.*

உடலினுள் இருக்கும் ஜீவன், சிறுவயது, இளமை, முதுமை என பல பருவங்களைக் கடந்துசெல்வதைப் போல, மரணத்தின்போது வேறு உடலை அடைகிறான். இந்த உடல் மாற்றம், நாம் நமது பழைய கிழிந்துபோன ஆடையைத் துறந்து புதிய ஆடையை உடுத்திக் கொள்வதைப் போன்றதே. பிறந்தவர் அனைவருக்கும் மரணம் நிச்சயம்; மரணமடைந்தோர் அனைவருக்கும் மறுபிறவியும் நிச்சயம். நிதான புத்தியுடையோர் இந்த உடல் மாற்றத்தினால் பாதிக்கப்படுவதில்லை.

ஆத்ம ஞானத்தைப் பற்றிய இவ்விளக்கம், உறவினர்களின் மீதான அர்ஜுனனின் பாசத்திற்கு ஸ்ரீ கிருஷ்ணர் அளித்த பதிலாகும்.

## கடமையைச் செய்தால் இன்பமடையலாம்

அடுத்ததாக, கடமையைச் செய்வதால் மகிழ்ச்சியடையலாம் என்னும் கர்ம காண்ட கொள்கையை கிருஷ்ணர் அர்ஜுனனுக்கு விளக்கினார். சத்திரியனான அர்ஜுனனின் கடமை தர்மத்திற்காகப் போர் புரிவதே, அதைவிட சிறந்த கடமை அவனுக்கில்லை என்றும், அவன் போர் புரியத் தயங்கக் கூடாது என்றும் அறிவுறுத்தினார். அவ்வாறு கடமையைச் செய்வதன் மூலம் ஸ்வர்க லோகத்தின் கதவுகள் திறக்கப்படும். மாறாக, கடமையைச் செய்யாவிடில், அதற்கான பாவத்தை அனுபவிக்க வேண்டும்; சிறந்த போர்வீரன் என்னும் நற்பெயர் கெட்டுவிடும்; கோழை என்று மக்கள் அவதூறு செய்வர்; அவமானம் மரணத்தை விடக் கொடியது. போர்க் களத்தில் மடிந்தால் ஸ்வர்கம் செல்லலாம், வென்றால் இவ்வுலகை ஆளலாம்—எனவே, உறுதியுடன் எழுந்து போர்புரிவாயாக என்று அர்ஜுனனுக்கு பகவான் ஊக்கமளித்தார்.

ஆத்ம ஞானத்தை விளக்கிய பின்னர், கடமையைச் செய்து ஸ்வர்கத்தில் இன்பமடையலாம் என்னும் கீழ்நிலைக் கொள்கையை பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அறிவுறுத்தியது சற்று ஆச்சரியத்தைத் தரலாம். நாம் இந்த உடலல்ல என்று முடிவான பின்னர், உடலால் கிடைக்கும் ஸ்வர்க லோக இன்பங்களை கிருஷ்ணர் எதற்காகப் பரிந்துரைக்க வேண்டும்?

போருக்குப் பின் தன்னால் மகிழ்ச்சியடைய முடியாது என்று அர்ஜுனன் கிருஷ்ணரிடம் கூறியிருந்தான்; அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் போரினால் எவ்வாறு இன்பமடையலாம் என்பது பற்றி ஸ்ரீ கிருஷ்ணர் விளக்கினார். மேலும், தனது கடமையைச் செய்தால் (போர் புரிந்தால்) பாவம் வரும் என்று கூறிய அர்ஜுனனின் வாதத்தை கடமையைச் செய்யாவிடில் (போர் புரியாவிடில்) நிச்சயம் பாவம் வரும் என்று கூறியதன் மூலம் ஸ்ரீ கிருஷ்ணர் முறியடித்தார்.

இருப்பினும், புலனின்பத்திற்காக கடமையைச் செய்தல் என்னும் இந்நிலையினை, புத்தி யோகம் என்னும் உயர்நிலையை எடுத்துரைத்ததன் மூலம் ஸ்ரீ கிருஷ்ணர் உடனடியாக கண்டிக்கின்றார்.

## பாவத்தில் சிக்காமல் செயல்படுதல்

இன்பமடைவதற்காக கடமையைச் செய்தல் என்னும் நிலைக்கு அடுத்தபடியாக, கர்ம பந்தத்திலிருந்து முற்றிலும் விடுபடுவதற்குரிய புத்தி யோகத்தை இறைவன் விளக்குகின்றார். பக்தி யோகத்தின் பயிற்சி நிலையே புத்தி யோகம் எனப்படுகிறது. புத்தி யோகத்தின்படி செயல்பட்டால் பாவ விளைவுகள் ஒருவனை அண்டாது; இம்முயற்சியில் சற்றும் இழப்பு கிடையாது; சிறிதளவு முன்னேற்றமும் மிகப்பெரிய பயத்திலிருந்து காப்பாற்றும். மேலும், இவ்வழியில் உள்ளவர்கள் ஒரே இலட்சியத்துடனும் திடமான உறுதியுடனும் இருப்பர்.

ஆனால் சிற்றறிவுடைய மனிதர்களோ பக்தி யோகத்தில் செயல்படாமல், வேதங்களின் மலர்ச் சொற்களால் கவரப்பட்டு ஸ்வர்க லோகங்களுக்கு ஏற்றம் பெறுவதையும் புலனின்பத்தையுமே விரும்புகின்றனர். அத்தகு மக்களின் இதயத்தில் பக்தித் தொண்டிற்கான திடமான உறுதி உண்டாவதில்லை. எனவே, வேதங்களின் முக்குணங்களுக்கு அப்பாற்பட்டவனாக ஒருவன் மாற வேண்டும். இலாப நஷ்டம், இன்ப துன்பம், வெற்றி தோல்வி போன்ற இருமைகளிலிருந்து விடுபட்டு பக்தி யோகத்தில் ஈடுபட வேண்டும்.

கிணற்றின் தேவைகள் அனைத்தும் பெரும் நீர்த்தேக்கத்தினால் பூர்த்தி செய்யப்படுவதுபோல, வேதங்களின் நோக்கங்கள் அனைத்தும் அதனை அறிந்த பக்தனால் அடையப்படுகின்றன. வேதங்களைப் பயில்வதன் நோக்கம் கிருஷ்ணரை அறிவதே; எனவே,

கிருஷ்ணரின் திருநாமத்தைச் சொல்பவன் எப்படிப்பட்ட இழிந்த குலத்தில் பிறந்திருந்தாலும், அவன் எல்லா புனித ஸ்தலங்களில் நீராடி, எல்லா வேத இலக்கியங்களையும் பன்முறை கற்று, யாகங்கள், தவங்கள் என எல்லாவற்றையும் ஏற்கனவே செய்தவனாவான். மேலும், அனைத்து மோசமான செயல்களையும் பக்தித் தொண்டின் உதவியால் தூரமாக வைத்துவிட்டு, அவன் கிருஷ்ணரிடம் சரணடைகிறான். அவ்வாறு சரணடைந்து பக்தித் தொண்டில் ஈடுபட்டுள்ளவன் பாவ புண்ணியங்களின் விளைவுகளிலிருந்து விடுபடுகிறான்; முக்தி பெற்று, முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரின் திருத்தலமான வைகுண்டத்தை அடைகிறான்.

புத்தி யோகம் எனப்படும் பக்தி யோகத்தை விளக்கியதன் மூலம், பாவ விளைவுகளைக் கண்ட அர்ஜுனனின் பயத்தை கிருஷ்ணர் அகற்றினார். புத்தி யோகத்தைப் பயிற்சி செய்பவன், வேதச் சடங்குகளுக்கு அப்பாற்பட்டவன் என்று கூறியதன் மூலம், குலம் நாசமடையும் என்னும் அர்ஜுனனின் வாதமும் முறியடிக்கப்பட்டது. மேலும், புத்தி யோகத்தில் நிலைபெற்றவனிடம் குழம்பிய நிலை என்ற கேள்விக்கே இடமில்லை.

அர்ஜுனன் எடுத்துரைத்த அனைத்து வாதங்களும் இத்துடன் (இரண்டாம் அத்தியாயத்தின் 53ஆவது ஸ்லோகத்துடன்) கிருஷ்ணரால் முறியடிக்கப்பட்டுவிட்டன. இனி தொடர்பவை அர்ஜுனனின் சந்தேகங்களும் ஸ்ரீ கிருஷ்ணரின் விடைகளுமே.

## புத்தி யோகத்தில் நிலைபெற்றவனின் அறிகுறிகள்

புத்தி யோகத்தில் நிலைபெறும்படி கிருஷ்ணர் அறிவுறுத்த, அவ்வாறு நிலைபெற்றவனின் அறிகுறிகள் யாவை, அவனது மொழி என்ன, எவ்வாறு பேசுவான், எவ்வாறு அமருவான், எவ்வாறு நடப்பான் என்ற கேள்விகளை அர்ஜுனன் எழுப்பினான்.

மனக் கற்பனையில் எழும் புலனின்பத்திற்கான எல்லா ஆசைகளையும் துறந்து, தூய்மையடைந்த மனதுடன் தன்னில் திருப்தியடைந்து வாழ்வதே *ஸ்தித-பிரக்ஞனின்* (தன்னில் நிலைபெற்றவனின்) அறிகுறி என்று விளக்கமளித்த ஸ்ரீ கிருஷ்ணர், அர்ஜுனனின் இதர கேள்விகளுக்கும் தொடர்ந்து பதிலளிக்கின்றார்.

**பேசும் விதம்:** பேசுதல் என்பது மற்றவர்களின் செயல்களுக்கு ஒருவன் எவ்வாறு பிரதிபலிக்கின்றான் என்பதைக் காட்டும். உடலாலும் மனதாலும் எழும் துன்பங்கள், இதர உயிர்களால் எழும் துன்பங்கள், இயற்கையினால் எழும் துன்பங்கள் ஆகிய மூவகைத் துன்பங்கள் அவனை நெருங்கும்போது அவன் பாதிக்கப்பட மாட்டான். பற்றுதல், பயம், கோபம் போன்றவை அவனைத் தாக்கினாலும், அவன் அவற்றிலிருந்து விடுபட்டு வாழ்வான். நன்மை தீமை, புகழ்ச்சி இகழ்ச்சி என எது நேர்ந்தாலும் பாதிக்கப்படாமல் இருப்பான்.

**அமரும் விதம்:** அமருதல் என்பது புலன்களை எவ்வாறு ஒருவன் செயல்படுத்தாமல் உள்ளான் என்பதைக் குறிக்கும். ஆமை எவ்வாறு தன் அங்கங்களை கூட்டிற்குள் இழுத்துக் கொள்ளுமோ, அதுபோல *ஸ்தித-பிரக்ஞன்* தனது புலன்களை அபாயகரமான நேரங்களில் (புலனின்பப் பொருள்களின் தொடர்பு கிட்டும்போது) உள்ளிழுத்துக் கொள்கிறான். பக்தித் தொண்டினால் உயர்ந்த சுவையை அவன் அடைவதால், ஜடவுலகின் தாழ்ந்த சுவைகளில் அவன் விருப்பம் காட்டுவதில்லை. சக்தியுடைய புலன்கள் யோகியையும் திசைதிருப்பக்கூடியவை என்பதால், *ஸ்தித-பிரக்ஞன்* தனது புலன்கள் அனைத்தையும் கிருஷ்ணரின் தொண்டில் ஈடுபடுத்துகிறான். அவ்வாறு

| அர்ஜுனன் போரிட மறுத்ததற்கான காரணங்கள் | ஸ்ரீ கிருஷ்ணர் வழங்கிய பதில்கள் |
|---|---|
| உறவினர்களின் மீதான பாசம் | நீ இந்த உடலல்ல, ஆத்மா; ஆத்மா அழிவற்றது—ஆத்ம ஞானம் (2.11–30) |
| சுகம் அனுபவிப்பதில் உள்ள தடை | மடிந்தால் ஸ்வர்கம் செல்லலாம், வென்றால் இவ்வுலகை ஆளலாம், கடமையைச் செய்—கர்ம காண்டம் (2.31–37) |
| பாவத்தின் விளைவுகளைக் கண்ட பயம் | கடமையைச் செய்யாவிடில் பாவம் வரும் (2.33)<br>பாவ விளைவுகளில் சிக்காமல் செயல்படு—புத்தி யோகம் (2.38–53) |
| குலம் நாசமடையும் | வேதங்களின் மலர்ச் சொற்களிலிருந்து வெளியே வா (2.42–46)<br>கடமையைச் செய்யாவிடில் குலம் நாசமடையும் (3.24) |
| குழம்பிய நிலை | புத்தி யோகத்தின் மூலம் கிருஷ்ண உணர்வில் ஸ்திரமான நிலையை அடைதல்—ஸ்தித பிரக்ஞ (2.52–72) |

ஈடுபடுத்தாமல், புலனின்பப் பொருள்களை தியானிப்பவன், அவற்றில் பற்றுதல் கொள்கிறான்; பற்றுதலிலிருந்து காமமும், காமத்திலிருந்து கோபமும், கோபத்திலிருந்து மயக்கமும், மயக்கத்திலிருந்து நினைவிழப்பும், நினைவிழப்பிலிருந்து அறிவு இழப்பும், அதிலிருந்து வீழ்ச்சியும் ஏற்படுகிறது.

**நடக்கும் விதம்:** நடத்தல் என்பது புலன்களை ஒருவன் எவ்வாறு செயல்படுத்துகிறான் என்பதைக் குறிக்கும். விருப்பு வெறுப்பின்றி முக்திக்கு உகந்த வழியில் அவன் புலன்களை செயல்படுத்துகிறான். படகை கடுங்காற்று அடித்துச் செல்வதைப் போல, அலைபாயும் ஒரே ஒரு புலன்கூட மனிதனின் அறிவை அடித்துச் சென்றுவிடும் என்பதை உணர்ந்த பக்தன், பொதுமக்களின் இரவில் (அதாவது, ஆன்மீக விஷயங்களில்) விழித்தும், அவர்களது பகலில் (அதாவது, புலனின்ப விஷயங்களில்) உறங்கியும் வாழ்கிறான். அவன் அவ்வாறு வாழ்வதால், எத்தனையோ நதிகள் கலந்தாலும் சஞ்சலமின்றி இருக்கும் கடலைப் போன்று, எத்தனையோ ஆசைகள் அவனை அணுகினாலும், அவன் சஞ்சலமின்றி இருக்கின்றான்.

பொதுவாக, ஸாங்கிய யோகம் எனும் தலைப்பில் அறியப்படும் இந்த அத்தியாயம், கீதையின் அனைத்துக் கருத்துக்களையும் சுருக்கமாக உரைப்பதால், கீதையின் உட்பொருள் சுருக்கம் என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அர்ஜுனனுக்கு எழுந்த சந்தேகம் குறித்து அடுத்த இதழில் (மூன்றாம் அத்தியாயத்தில்) காண்போம்.

*ஸ்ரீ கிரிதாரி தாஸ் அவர்கள், ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பத்திரிகை உட்பட பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் வெளியீடுகளுக்குத் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.*

## இரண்டாம் அத்தியாயத்தின் ஐந்து பகுதிகள்

(1) அர்ஜுனனின் இதர சந்தேகங்களும் சரணடைதலும் (1-10)
- பாவ விளைவுகள் (5)
- தீர்மானிக்க முடியாத நிலை (6,7)

(2) ஆத்ம ஞானம் (11-30)
- ஆத்மாவிற்கு அழிவு கிடையாது

(3) கர்ம காண்டம் (31-37)
- கடமையைச் செய்வதால் பௌதிக சுகம் பெறுதல்

(4) புத்தியோகம் (39-53)
- கர்ம பந்தத்தில் சிக்கிக் கொள்ளாமல் செயல்படுதல்
- பாவ விளைவுகளுக்கான பயத்தைத் தோற்கடித்தல், 28-53
- குல தர்ம சீரழிவு பற்றிய விவாதத்திற்கு எதிர்வாதம், 42-46

5) ஸ்தித-பிரக்ஞன் (54-72), கிருஷ்ண உணர்வில் நிலைபெற்றவனின் அறிகுறிகள்
- அறிகுறிகள் (55)
  - தன்னில் திருப்தியுற்றவன்
  - மகிழ்ச்சியுடன் கிருஷ்ண பக்தியில் ஈடுபடுகிறான்
- பேசும்விதம் (56, 57)
  - மற்றவர்களின் செயல்களுக்குப் பிரதிபலிக்கும் விதம்
  - மூவகைத் துன்பங்களால் பாதிக்கப்படாதவன்
  - பற்றுதல், பயம், கோபத்திலிருந்து விடுபட்டவன்
- அமரும்விதம் (58-63)
  - புலன்களை செயல்படுத்தாமல் இருக்கும் விதம்
  - புலனின்பப் பொருள்களிலிருந்து புலன்களை உள்ளிழுத்தல் (ஆமை)
  - உயர்ந்த சுவையினால் தாழ்ந்த சுவையை கைவிடுதல்
- நடக்கும் விதம் (64-72)
  - புலன்களை செயல்படுத்தும் வழிமுறை
  - முக்திக்கான சட்டதிட்டத்தின்படி செயல்படுதல்
  - பாய்ந்து வரும் பௌதிக ஆசைகளால் சஞ்சலமடைவதில்லை

பகவத் கீதையில், கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம் ஆகிய விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. இந்த இரண்டாம் அத்தியாயத்தில், கர்ம யோகமும் ஞான யோகமும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன; பக்தி யோகத்தைப் பற்றிய சிறு குறிப்பும் தரப்பட்டுள்ளது. எனவே, இது முழு கீதையின் சுருக்கமாகும். (2.72, பொருளுரை)

# கோவையில் ஸ்ரீ ஜகந்நாதர் ரதயாத்திரை

ஜனவரி 08, 2011: இஸ்கான் கோயம்புத்தூர் சார்பில் 19ஆம் வருட ஸ்ரீ ஜகந்நாதர் ரதயாத்திரை மிகவும் பிரம்மாண்டமான முறையில் கொண்டாடப்பட்டது. தவத்திரு. பானு ஸ்வாமி, தவத்திரு. பக்தி வினோத ஸ்வாமி, மற்றும் கோயம்புத்தூர் மாநகர மேயரான திரு. வேங்கடாசலம் ஆகியோர் முன்னிலையில் தேர் திருவிழா தொடங்கப்பட்டது. மாநகரின் பிரதான வீதிகளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ரதத்தினை இழுக்க, கோலாட்டம், ஒயிலாட்டம் போன்ற தென்னிந்திய பாரம்பரிய நடனக் கலைஞர்களின் 13 குழுக்கள் ஜகந்நாதரின் திருப்திக்காக நடனமாடினர். ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தைச் சார்ந்த பல்வேறு குழுவினரும் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு கிருஷ்ணரின் திருநாமங்களைப் பாடி ஆடினர். ரதம் சென்ற வீதிகளில் இருந்தவர்கள் ஸ்ரீ ஜகந்நாதருக்காக பூக்கள், பழங்கள் மற்றும் இதர பொருட்களை அர்ப்பணித்து பிரசாதம் பெற்று கொண்டனர். வழியெங்கும் ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பத்திரிகையும் இதர புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டன.

மறுநாள் பத்மாவதி கல்யாண மண்டபத்தில் தவத்திரு. பானு ஸ்வாமி அருளிய சிறப்பு வகுப்புகளும், பக்தர்களால் அரங்கேற்றப்பட்ட ஜகந்நாதர் நாடகமும் ஆன்மீக அன்பர்களை வெகுவாகக் கவர்ந்தன.



ஸ்ரீ ஜகந்நாதர், பலதேவர், மற்றும் சுபத்ரையின் விக்ரஹங்கள் பல்லக்குகளில் பிரம்மாண்டமாக பவனி வந்த காட்சி.





**மேலே:** கோவையின் வீதியில் ஸ்ரீ ஜகந்நாதரின் தேர்
**இடது:** புத்தக கண்காட்சியில் வைக்கப்பட்ட சில புத்தகங்கள்

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் அத்தியாயம், ஸ்லோகம் 22

த்வம் ந: ஸந்தர்ஷிதோ தாத்ரா துஸ்தரம் நிஸ்திதீர்ஷதாம்
கலிம் ஸத்த்வ-ஹரம் பும்ஸாம் கர்ண-தார இவார்ணவம்

#### மொழிபெயர்ப்பு

இறைவனின் இச்சையால்தான் மேன்மைமிக்க தங்களை நாங்கள் சந்தித்திருக்கிறோம். ஆதலால் மனிதனின் எல்லா நற்குணங்களையும் சீரழிப்பதான கலி யுகமெனும் துன்பக் கடலைக் கடக்க உதவும் கப்பலின் தலைவராக தங்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

#### பொருளுரை

கலி யுகம் மனிதனுக்கு மிகவும் அபாயகரமானதாகும். மனித வாழ்க்கை தன்னுணர்வைப் பெறுவதற்காகவே உள்ளது, ஆனால் அபாயகரமான இந்த யுகத்தின் காரணத்தினால், வாழ்வின் குறிக்கோளை மனிதர்கள் முற்றிலும் மறந்துவிட்டனர். இந்த யுகத்தில், ஆயுள் படிப்படியாக குறைந்துவிடும். நினைவாற்றல், இனிய உறவுகள், பலம், நற்குணங்கள் ஆகியவற்றை மக்கள் படிப்படியாக இழந்து விடுவார்கள். இந்த யுகத்தில் விளையும் ஒழுக்கக்கேடுகளின் ஒரு பட்டியல், இந்நூலின் பன்னிரெண்டாம் காண்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இவ்வாழ்வை தன்னுணர்வு பெறுவதற்காகப் பயன்படுத்த விரும்புவோருக்கு இந்த யுகம் மிகவும் கடினமானதாக இருக்கும். புலனின்ப விவகாரத்தில் மக்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பதால், தன்னுணர்வைப் பற்றி அவர்கள் முற்றிலுமாக மறந்துவிட்டனர். தன்னுணர்வு பெறுவதை நோக்கமாகக் கொண்ட நமது நீண்ட பயணத்தில் ஒரு நொடிப் பொழுதே இக்குறுகிய வாழ்வு என்பதை அவர்கள் உணராததால், தன்னுணர்வு தேவையற்றது என்று அவர்கள் தங்களது பைத்தியக்காரத்தனத்தினால் வெளிப்படையாகவே கூறுகின்றனர். கல்விமுறை முழுவதும் புலனுகர்ச்சியை நோக்கி முடுக்கிவிடப்பட்டுள்ளன, கற்றறிந்த யாரேனும் இதுகுறித்து சற்று சிந்தித்துப் பார்ப்பாரானால், கலி யுகத்திலுள்ள குழந்தைகள் கல்வி என்ற பெயரில் கசாப்புக் கூடங்களுக்கு வேண்டுமென்றே அனுப்பப்படுகின்றனர் என்பதைக் காண்பார். எனவே, கல்வியறிவுடையோர் இந்த யுகத்தில் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். மேலும், கலி யுகமெனும் ஆபத்தான சமுத்திரத்தைக் கடக்க வேண்டுமென்ற விருப்பம் அவர்களுக்கு சிறிதேனும் இருந்தால், நைமிஷாரண்ய முனிவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, ஸ்ரீ சூத கோஸ்வாமி அல்லது அவரது உண்மையான பிரதிநிதியை கப்பலின் தலைவராக அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். பகவத் கீதை அல்லது ஸ்ரீமத் பாகவதத்தின் உருவிலுள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் செய்தியே அந்த கப்பலாகும்.

### ஸ்லோகம் 23

ப்ரூஹி யோகேஷ்வரே க்ருஷ்ணே ப்ரஹ்மண்யே தர்ம-வர்மணி
ஸ்வாம் காஷ்டாம் அதுனோபேதே தர்ம: கம் ஷரணம் கத:

#### மொழிபெயர்ப்பு

எல்லா யோக சக்திகளுக்கும் எஜமானரும், பரம சத்தியமுமான ஸ்ரீ கிருஷ்ணர், தமது சொந்த வசிப்பிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டதால், தர்மத்தின் கொள்கைகள் தற்போது யாரிடம் அடைக்கலம் புகுந்துள்ளன என்பதை தயவுகூர்ந்து எங்களுக்குக் கூறுவீராக.

#### பொருளுரை

தர்மம் என்பது சாக்ஷாத் முழுமுதற் கடவுளால் வகுக்கப் பட்ட விதிமுறைகளாக இருக்க வேண்டியது அவசியம். எப்போதெல்லாம் தர்மத்தின் கொள்கைகள் தவறாக உபயோகிக்கப்படுகின்றதோ அல்லது அலட்சியம் செய்யப் படுகின்றதோ, அப்போதெல்லாம் அவதரிக்கும் முழுமுதற் கடவுள் தர்மத்தின் கொள்கைகளை சீர்நிலைப்படுத்துகின்றார். இது பகவத் கீதையில் (4.8) கூறப்பட்டுள்ளது. இங்கு நைமிஷாரண்ய முனிவர்கள் இக்கொள்கைகளைப் பற்றி விசாரணை செய்கின்றனர். இக்கேள்விக்குரிய பதில் பின்வரும் அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. முழுமுதற் கடவுளின் தெய்வீக ஒலியின் பிரதிநிதியாக இருப்பதால், ஸ்ரீமத் பாகவதம், திவ்ய ஞானத்திற்கும் தர்மத்தின் கொள்கைகளுக்கும் முழுமையான பிரதிநிதியாகத் திகழ்கின்றது.

ஸ்ரீமத் பாகவதம், முதல் காண்டத்தின் "முனிவர்களின் கேள்விகள்" என்னும் முதலாம் அத்தியாயத்திற்கான பக்திவேதாந்தப் பொருளுரைகள் இத்துடன் நிறைவடைகின்றன. (தொடரும்)

# பல்வேறு சமூக சேவைகளைக் காட்டிலும் ஆரம்ப நிலை பக்தி உயர்ந்தது.

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் ஒருமுறை தனது உபன்யாஸத்தில் பின்வரும் கருத்தைக் கூறினார்:

பல்வேறு மருத்துவமனைகளைக் கட்டுதல், ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு உணவளித்தல் அல்லது வீடு கட்டித் தருதல் போன்றவை சமூக சேவகர்களின் செயல்களாகும். வேதக் கல்வி, தியானம், தவம் போன்றவை ஞானிகளின் செயல்களாகும். இருப்பினும், முழுமுதற் கடவுளின் விக்ரஹத்திற்கு பூஜை நடைபெறும் சமயத்தில் ஓர் ஆரம்பநிலை வைஷ்ணவ பக்தன் ஒரே ஒருமுறை மணியடித்தாலும், அச்செயல் முன்கூறிய (சமூக சேவகர்கள் மற்றும் ஞானிகளின்) செயல்களைக் காட்டிலும் ஆன்மீகமாகவும் மற்ற விதத்திலும் இலட்சக்கணக்கான மடங்கு உயர்ந்ததாகும்.

பிப்ரவரி 22, ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் தோன்றிய நாள்

—ஸ்ரீல பிரபுபாதர் அருளிய Renunciation through Wisdom என்னும் புத்தகத்தின் இரண்டாவது அத்தியாயத்திலிருந்து



ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர்

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(பிப்ரவரி 1, 2011 முதல் மார்ச் 15, 2011 வரை)**

### பிப்ரவரி

8, செவ்வாய், ஸ்ரீமதி விஷ்ணுபிரியா தோன்றிய நாள்
ஸ்ரீ விஸ்வநாத சக்ரவர்த்தி தாகூர் மறைவு நாள்
ஸ்ரீ புண்டரீக வித்யாநிதி தோன்றிய நாள்
ஸ்ரீ ரகுநந்தன தாகூர் தோன்றிய நாள்
ஸ்ரீ ரகுநாத தாஸ கோஸ்வாமி தோன்றிய நாள்

10, வியாழன், ஸ்ரீ அத்வைத ஆச்சாரியர் தோன்றிய நாள்
மதியம் வரை விரதம்

12, சனி, ஸ்ரீ மத்வாசாரியர் மறைவு நாள்

13, ஞாயிறு, ஸ்ரீ இராமானுஜாசாரியர் மறைவு நாள்

14, திங்கள், பௌமி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:35–10:31
வராஹ தேவருக்கான விரதம் இன்றே அனுசரிக்கப்படுகிறது

15, செவ்வாய், வராஹ துவாதசி, பகவான் வராஹரின் அவதாரத் திருநாள்

16, புதன், நித்யானந்த திரியோதசி, பகவான் நித்யானந்தரின் அவதாரத் திருநாள் (மதியம் வரை விரதம்)

18, வெள்ளி, ஸ்ரீல நரோத்தம தாஸ தாகூர் தோன்றிய நாள்

22, செவ்வாய், ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

28, திங்கள், விஜய ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:30–10:28

### மார்ச்

1, செவ்வாய், ஸ்ரீல ஈஸ்வர பூரி மறைவு நாள்

5, சனி, ஸ்ரீல ஜகந்நாத தாஸ பாபாஜி மறைவு நாள்
ஸ்ரீ ரஸிகானந்தர் மறைவு நாள்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற் கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.






# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

65 ஆண்டு கால பாரம்பரியமிக்க
**Back to Godhead**
பத்திரிகையின் தமிழ் பதிப்பு, தற்போது
**உங்கள் இல்லம் தேடி!**

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் மாதந்தோறும்
உங்கள் இல்லம் தேடி வர,
சந்தாதாரராக மாறுங்கள்.
ஒரு வருட சந்தா: ரூ.160
இரு வருட சந்தா: ரூ.300
ஐந்து வருட சந்தா: ரூ.700

### நீங்களும் சந்தாதாரராக மாற...

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில், தங்களது முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணுடன் அனுப்பி வைக்கவும். At par காசோலைகள் (cheque) ஏற்கப்படும், ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது.

அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ கிருஷ்ண தரிசனம், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் படியுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!**




தங்கமயில்

தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

இராஜபாளையம்
813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

திண்டுக்கல்
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

காரைக்குடி
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

தேனி
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

இராமநாதபுரம்
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

சிவகாசி
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

தூத்துக்குடி
351, WGC. ரோடு, தூத்துக்குடி
போன்: 0461 2337553